673

உ

செந்திலாண்டவன் துணை

# விசைப்பா

# திருப்பல்லாண்டு

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY.
TANJORE

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்
·ம் ஆண்டு (13-6-49) நினைவு வெளியீடு

ஸ்ரீ காசி மடம் : திருப்பனந்தாள்
1949

615

உ

செந்திலாண்டவன் துணை

ஒன்பதாந்திருமுறையாகிய

# திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

615

இவை

**திரு. வி. மு. சுப்பிரமணிய ஐயரவர்கள் B.O.L.,**

எழுதிய குறிப்புரையுடன்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்களாகிய

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள்**

அவர்களுடைய கட்டளையின்படி


மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

குமாரர்

எஸ். கலியாணசுந்தரையரால்



சென்னை

கபீர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றன.

விரோதி வருஷம், வைகாசி மாதம்.


உரிமைப்பதிவு] [ஜூன் 1949

616

## இப்புத்தகத்தில் அடங்கியவை


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| | முகவுரை | | | v |
| | நூலாசிரியர்களைப் பற்றிய குறிப்புக்கள் | | | viii |
| க. | திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா | | ... | க |
| உ. | சேந்தனர் | ஷை | ... | கக |
| ௩. | கருவூர்த் தேவர் | ஷை | ... | கஎ |
| ச. | பூந்துருத்தி நம்பிகாட நம்பி | ஷை | ... | ௩எ |
| ரு. | கண்டராதித்தர் | ஷை | ... | ௩கூ |
| சூ. | வேணாட்டடிகள் | ஷை | ... | ச௦ |
| எ. | திருவாலியமுதனர் | ஷை | ... | சக |
| அ. | புருடோத்தம நம்பி | ஷை | ... | சஎ |
| கூ. | சேதிராயர் | ஷை | ... | ரு௦ |
| க௦. | சேந்தனர் திருப்பல்லாண்டு | | ... | ருஉ |
| | குறிப்புரை | | ... | ருச |
| | செய்யுள் முதற் குறிப்பகராதி | | ... | சூ௦ |

## திருச்சிற்றம்பலம்.

திருவிசைப்பா அருளிச்செய்த ஒன்பதுநாயன்மார் திருநாமமும் திருப்பதிகவகையும பண்ணின் வகையுந் தெரிவுமடைவும்.

---

செம்பொன்மணியம்பலத்துநிருத்தனுர்க்குத்
திருவிசைப்பாவுரைத்தவர்தந்திருப்பேர்சொல்லிற்
பம்புபுகழ்செறிதிருமாளிகைமெய்த்தேவர்
பரிவுடையசேந்தனுர்கருவூர்த்தேவர்
நம்பிகாடவர்கோனற்கண்டராதித்தர்
நன்குயர்வேணுட்டடிகடிருவாலியமுதர்
அம்புவியோர்புகழ்புருடோத்தமர்சேதிராய
ராகவிவரொன்பதின்மர்தாமுறைகண்டடைவே. (க)

அடைவுறுமாளிகைத்தேவர்*நான்குசேந்த
ரன்புறுபல்லாண்டொன்ருேடிசைப்பாமூன்று
திடமுடையகருவூரர்பத்துவீறிற்
சிறந்தகாடவரிரண்டுகண்டர்வேணுடர்
படிபுகழொரவ்வொன்றுதிருவாலிநான்கு
பன்னுபுருடோத்தமனுரிரண்டுசேதிராயர்
உடையதிருக்கடைக்காப்பொன்ருகவிருபத்தொன்
பாஞேதுசெய்யுண்முந்நூற்றறுபதிஞேடைந்தே. (உ)

ஐந்துடனுல்வருமுரைத்ததிருக்கடைக்காப்பிற்பண்
ணறையின்மாளிகைத்தேவர்†நான்கிலொன்றுகாந்தாரம்
முந்துகருவூரார்பத்தினிரண்டுபுறநீர்மை
மொழிந்திடுகாந்தாரமொன்றுகாடவர்கோனிரண்டின்
நந்தவில்சாளரபாணியொன்றுவேணுட்டடிக
ணவின்றதொன்றுபுறநீர்மைதிருவாலியமுதர்
பந்தமறச்சொன்னன்கிஞென்றுநட்டராகம்
பகர்ந்திடிஞென்றிந்தளமற்றெறவையும்பஞ்சமமே. (ங)

---

சில திருப்பதிகங்களிலே
சில திருப்பாட்டுக்கள் இறந்துவிட்டன.

---

(பி-ம்.) * நாலு † நாலி

செந்திலாண்டவன் துணை

# முகவுரை

சைவத் திருமுறைகளுள் ஒன்பதாந் திருமுறையாக விளங்குவது திருமாளிகைத்தேவர் முதல் சேதிராயர் என்பவர் இறுதியாக உள்ள ஒன்பதின்மர் இயற்றிய திருவிசைப்பாவும் சேந்தனார் இயற்றிய திருப்பல்லாண்டும் அடங்கிய தொகுதியாகும். திருவிசைப்பா திருவிசைப் பாமாலையென்றும் வழங்கி வந்தது; இது திருமுறை கண்ட புராணம், 26-ஆம் செய்யுளால் அறியப்படும். இவற்றாற் பாடப்பட்ட தலங்கள்: கங்கைகொண்ட சோளேச்சரம், தஞ்சையிராசராசேச்சரம், திருக்களந்தையாதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருச்சாட்டியக்குடி, திருப்பூவணம், திருமுகத்தலை, திருவாரூர், திருவாவடுதுறை, திருவிடைக்கழி, திருவிடைமருதூர், திருவீழிமிழலை, திரைலோக்கிய சுந்தரம், தில்லை (சிதம்பரம்) என்பன. இவற்றுட் பதினறு பதிகங்கள் சிதம்பரத்துக்கு உரியன. இவை ஆதித்த சோழன் காலம் முதல் கங்கைகொண்ட சோழன் காலம் முடிய இயற்றப்பெற்றவை. கருவூர்த்தேவர் கங்கைகொண்ட சோளேச்சரத்தைப்பற்றிப் பாடியிருப்பதால் இஃது அறியப்படும்.

தேவாரத் திருமுறைகளைக்கண்டுபிடித்து அவற்றை ஏழாக வகுத்துத் தஞ்சை இராசராசேச்சரத்தில் ஓதும்படி நிவந்தம் அமைத்த முதலாம் இராசராசன் காலத்தே இவை சிறப்புற்றிருந்தனவென்பது, அவனால் தஞ்சைப் பெருவுடையார் கோயிலிற் பணிவிடையின் பொருட்டு நியமிக்கப்பட்ட தளிச்சேரிப்பெண்டுகளிற் சிலர் தரித்

திருந்த பெயர்களாகிய 'நீறணிபவளக் குன்றம்', 'எடுத்த பாதம்', 'மழலைச்சிலம்பு' என்பவற்றால் விளங்கும். இவை முறையே திருமாளிகைத் தேவரது திருவிசைப்பா முதற்பதிகத்து ஆறும் திருப்பாட்டிலும், திருவாலியமுதனார் இயற்றிய மூன்றும் பதிகத்து ஐந்தாம் திருப்பாட்டிலும் உள்ளன.

திருவிசைப்பாச் செய்யுட்களில் பல அருஞ் சொற்கள் காணப்படுகின்றன. திருவிடைக்கழி முருகப் பெருமான்மீது பாடப்பட்ட ஒரு பதிகமும் உள்ளது. சில திருவிசைப்பாக்கள் அந்தாதித்தொடையாக உள்ளன. இவற்றின் மூலங்கள் எந்தையாரவர்கள் பிரதிகளோடு ஒப்பிடப்பெற்றுத்திருத்தப்பெற்றுள்ளன.

பாராயணத்துக்குரிய ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தமிழ்நேசர்கள் யாவரும் படித்துப் பெரும்பயனுறவேண்டுமென்னும் சிறந்த கருத்துடன் இவற்றைக் குறிப்புரையுடனும் ஆசிரியர் வரலாற்றுடனும் ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகளுடைய நினைவுமலராக வெளிவரும்படி இப்போது திருப்பனந்தாள் காசிமடத்தில் இருபதாம் பட்டத்தில் எழுந்தருளி விளங்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள் ஏற்பாடு செய்திருப்பது தமிழ்மக்கள் யாவராலும் பெரிதும் போற்றத்தக்கது.

இவர்கள் பட்டத்துக்கு வந்தது முதல் நாளது வரையில் தமிழ்மொழி, தேவாரத்திருமுறைகள், சைவசித்தாந்தம், வைத்தியம், ஜீவகாருண்யம், கல்வி, பொது நன்மை, அன்னதானம் முதலியவை சம்பந்தமாக அவ்வப்போது ஏற்படுத்தியுள்ள பேரறக் கட்டளைகளின் சுருக்கமான விவரங்கள் யாவரும் அறிந்து மகிழும்படி இப்புத்தகத்தின் அனுபந்தமாக வெளியிடப்பெற்றுள்ளன.

இவர்களுடைய திருமேனியாரோக்கியத்தையும் தீர்க்காயுளையும் குறித்து ஸ்ரீ செந்திலாண்டவன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

திருப்பனந்தாள் காசிமடத்து, ஆயிரம் ரூபா தமிழ்ப் பரிசை முதன்முறை பெற்றவரும், சென்னை, கிறிஸ் தவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியருமாக உள்ள ஸ்ரீமான் வி. மு. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் **B.O.L.,** இந்நூலுக்கு ஆசிரியர் வரலாற்றையும் குறிப் புரையையும் எழுதித் கொடுத்துதவினார்கள். அவர் களுக்கு என்மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இந்நற்காரியத்தில் நான் ஈடுபடும்படி நேர்ந்ததை ஒரு பெரும் பேறாக மதிக்கின்றேன்.

விரோதி ௵
வைகாசி௴ ௩௧-ம் ௳

இங்ஙனம்
**S. கலியாணசுந்தரம்**

# நூலாசிரியர்களைப்பற்றிய குறிப்புக்கள்

க. திருமாளிகைத் தேவர்: இவர் திருவிசைப்பா இயற்றிய ஒன்பதின்மர்களுள் ஒருவர்; போகரென்னும் சித்தருடைய மாணுக்கருள் ஒருவரென்பர்; இவர் திருவாவடுதுறையில் வாழ்ந்து வந்தவர்; நாரசிங்கனென்னும் கொடிய அரசனெருவனை வெல்லும்பொருட்டு ஸ்ரீகோமுத்தீசுவரர் திருக்கோயிலின் மதிலின்மேலிருந்த இடபங்களை இவர் ஓருருவாக்கி அனுப்பினரென்பர். இவருக்குத் திருவாவடுதுறை மடத்தினுள் கோயில் அமைந்துள்ளது. ஸ்ரீகோமுத்தீசுவரர்க்கு உச்சிக்காலத்திற் பூஜையான பின்பு இவருக்கும் ஆதிசைவர் இங்கே வந்து பூஜையை முடித்தபின் மடத்திற் பகற்போசனம் நடைபெறுவது வழக்கம். இது மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் ஒரு சமயம் இயற்றிய "பேசு புகழ்ச்சுப் பிரமணிய தேசிகன்பொன், வீசு கழற்கடியேன் விண்ணப்பம்—நேசம், வருதிரு மாளிகைத்தே வன்பூசை யாயே, கருதுபந்தி யாதல் வழக் கம்" என்னும் வெண்பாவால் அறியப்படும். திரு வீழிமிழலைக்கோயிற் சாசனம், அக்கோயிற்குத் திரு நுந்தாவிளக்கொன்று வைத்தவரும், சிவஞானியும் திரு மாளிகைத்தேவர் என்று வழங்கப் பெற்றவருமான ஐயந்தன் என்பவரைப்பற்றிக் கூறுதலால் இவரும் சேந்தனும் ஒருவரே யென்று கருத இடமுண்டென்பர்; சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக்கம், 34-5. இவர் காலம் கி. பி. 10-11-ஆம் நூற்றுண்டாகும். இவர் பல அற்புதச் செயல்களை நிகழ்த்தினரென்பர்; அவை இன்னவென்பது பின்வரும் பாடலால் அறியப்படும்;

"சூடங்கர்விசும் பிடைகிறுவிக் குணபநடந் திடவியக்கிக்
கொடிஞ்சிப் பொற்றேர்
வடங்கழற்றி யோட்டிமதி னந்திகளை வரவழைத்து
வரைநன் காட்டின் [சுவற்றி
உடம்பினெழு புகைமாற்றிக் கொங்கணர்பாத் திரஞ்
யுணவ தாய்வெந்
திடும்பயறு முளைசெய்தெமக் கருடிருமா ளிகைத்தேவ
ரிணைத்தாள் போற்றி."

(மதுரகவி - தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணிய முனிவரியற்றியது.)

உ. சேந்தனார்: இவர் பட்டினத்து அடிகளுடைய காரியஸ்தரென்று பெரியோர் கூறுவர்; இவரைச் சோழன் சிறையிலிட்டபொழுது திருவெண்காடர் பாடிய "மத்தளை தயிருண்டானு மலர்மிசை மன்னினானும், நித்தமுந் தேடிக்காணா நிமலனே யமலமூர்த்தி, செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தனிட்ட, கைத்தளை நீக்கியென்முன் காட்டுவெண் காட்டுளானே" என்னும் பாடலால் இவர் நாங்கூரினரென்பது தெரிகிறது; அவ்வூர் திருவெண்காட்டுக்கு அணித்தாக உள்ளது. இவரும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டுகளை இயற்றியவரும் வேறென்று கூறுவாரும் உளர். இவர் ஒரு சமயம், ஸ்ரீ நடராசப் பெருமானுக்குத் தவிட்டை அமுதாக நிவேதனஞ் செய்தனரென்னும் அரிய செய்தி ஸ்ரீ சிவஞான சுவாமிகள் இயற்றிய, "வரையேற விட்டமுதஞ் சேந்தனிட வுண்டானைவல் லினமென் றாலும், உரையேற விட்டமுத லாகுமோ வெனைச்சித்தென் றுரைக்கினென்னும், நரையேற விட்டமுத னளவனைக் கொண்டு நாளும் புலிசை மேவும், கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண் டாமோ" என்னும் பாடலால் அறியப்படும். திருப்பல்லாண்டை இயற்றிய பெருமை வாய்ந்தவரும் இவரே.

௩. கருவூர்த்தேவர்: இவர் சோழநாட்டிலுள்ள கருவூரினர்; சித்தருள் ஒருவரென்றும் இவரைக் கூறுவர்; தஞ்சாவூரில் முதலாம் இராஜராஜன் பெருவுடையாரைப் பிரதிட்டை செய்த போது அஷ்டபந்தன மருந்து இளகியதால் சிவலிங்கப் பெருமான் ஆவுடையாரோடு பொருந்தி நில்லாமை கண்டு கவலையுற அவனுடைய மந்திரி இவரை வருவித்தனனென்பதும் இவர் தம் பலத்தை உமிழ மருந்து இறுகிற்றென்பதும் கர்ண பரம்பரைச் செய்திகள். இவர் கங்கைகொண்ட சோளேச்சரத்திற்கும் திருவிசைப்பா இயற்றியிருத்தலால் கங்கை கொண்ட சோழன் காலத்தும் வாழ்ந்தவராதல் வேண்டும். இவருடைய திருவுருவம் கருவூர் ஆனிலைத் திருக்கோயிலிலும், தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும் உள்ளது.

௪. பூந்துருத்தி நம்பிகாட நம்பி: முதல் ராஜராஜனது 35-ஆம் ஆட்சியாண்டில் அமைந்த சாஸனமொன்றால் நம்பிகாட நம்பி என்பார் ஆத்திரேய கோத்திரத்தவராக அவ்வரசன் காலத்து வாழ்ந்துவந்த அடியாரென்பது அறியப்படுதலால் இவர் அவ்வரசன் காலத்தவரென்பது தெரிகிறது. காடவர் கோனென்றும் கூறப்படுதலால் பல்லவர் வகையைச் சேர்ந்தவரென்றும் கூறுவர்.

௫. கண்டராதித்தர்:—இவர் சோழ குலத்தவர்; இஃது இவரியற்றிய திருவிசைப்பாவின் திருக்கடைக் காப்புச் செய்யுளில், "சீரான்மல்கு தில்லைச் செம்பொ னம்பலத் தாடி தன்னைக், காரார் சோலைக் கோழி வேந்தன் தஞ்சையர்கோன் கலந்த, ஆராவின் சொற்கண்டராதித்தன்" என வருவதனால் தெரிகின்றது. தம் தந்தையான முதற் பராந்தகன் தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன்னோடு வேய்ந்ததைத் தம் திருப்பாட்டிற் குறிக்கின்றார்; "வெங்கோல் வேந்தன் றென்னனாடு மீழமுங் கொண்ட திறற், செங்கோற் சோழன் கோழி வேந்தன் செம்பியன் பொன்னணிந்த, அங்கோல் வளையார் பாடியாடுமணி தில்லை" என்பது அச்செய்யுட் பகுதியாகும்; இவரைப்

பற்றிச் சாஸனம் 'சிவஞான கண்டராதித்தர்' என்று அடைமொழியோடு கூறுவதனால் இவருடைய சிவபக்திச் சிறப்பு விளங்கும்; இவர் இளமையிலிறந்தனரென்றும், இவருடைய கோப்பெருந் தேவியும், உத்தம சோழன் தாயுமான செம்பியன்மாதேவி நீண்ட நாள் வாழ்ந்திருந்து சிவாலயத் திருப்பணிகளைப் புரிந்து தம் நாளைக்கழித்தன ரென்றும் சாஸனங்கள் கூறுகின்றன. இவர் தம் தேவியா ரான செம்பியன் மாதேவியாரோடு சிவபெருமானை வணங் கும் பாவனையிற் பிம்பங்கள் வகுக்கப்பட்டுள்ளமையும், செம்பியன் மாதேவியாருருவை முதல் ராஜராஜன் பிரதிஷ்டித்து வணங்கியமையும் இவ்விருவருடைய அள விறந்த சிவபக்திப் பெருக்கை விளக்கும்.

சு. வேணாட்டடிகள்: இவர் கொடுந்தமிழ் நாடு பன் னிரண்டனுள் ஒன்றான வேணாட்டைச் சேர்ந்தவர்; வேணா டென்பது சாஸனங்களில் தென்திருவாங்கூர்ப் பகு திக்கு வழங்கப்பட்டுள்ளது; இவரும் அந்நாட் டரசருள் ஒருவர் போலும்; அடிகள் என்ற பெயர் இவர் துறவி யாதலைக் குறிக்கும். இந்நாட்டு அரசர்கள் 16-ஆம் நூற்றாண்டிலும் தமிழ்ப் புலமை வாய்ந்தவரென்பது சாஸன வாயிலாக அறியப்படுகின்றது.

எ. திருவாலியமுதனார்: இவர் பெயரால் இவர் சோழ நாட்டிலுள்ள திருவாலி என்னும் ஊரினரென்று தெரி கின்றது. அமுதனாரென்பது இவர் பெயரென்பதும், இவர் தம்மை, "வரைசெய் மாமதின் மயிலையர் மன்னவன் மறைவல திருவாலி", "தூய நான்மறை யானமுதவாலி சொன்ன தமிழ் மாலை", "அறைசெந்நெல்வான் கரும்பி னணியாலைகள் சூழ்மயிலை, மறைவலவாலி" என்று கூறிக் கொள்வதால் இவர் அந்தணரென்பதும், மயிலையர் மன்ன னென்பதும் அறியக் கிடக்கின்றன. அமுதன் என்னும் பெயர் ஓரிடத்து மட்டும் காணப்படுகின்றது.

அ. புருடோத்தம நம்பி:—இவர் மறையவரென்பது இவர் இயற்றிய திருவிசைப்பாத் திருக்கடைக் காப்புச்

செய்யுளில் வரும் "மாசிலா மறை பல வோது நாவன் வண்புருடோத்தமன்" என்னும் பகுதியால் அறியலாகும்; இவரைப் பற்றி வேறு யாதொன்றும் தெரியவில்லை.

௬. சேதிராயர் : இவர் மலையமான்களுடைய பரம்பரையினர் போலும்; அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவரான மெய்ப்பொருள் நாயனார் சேதிநாட்டரசரென்பதும் ஈண்டு உணரத் தக்கது; இவர் தம்மை, "ஏயுமாறெழிற் சேதிபர் கோன்றில்லை, நாயனாரை நயந்துரை செய்தன" என்பதனால் இவர் அரசரென்பது அறியப்படும்; இவரது காலம் முதலிய பிற அறியக் கூடவில்லை.

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# திருவிசைப்பா

## * திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா

### க. கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

1 ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றே
யுணர்வுசூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றே
சித்தத்துட்டித்திக்குந்தேனே
அளிவளருள்ளத்தானந்தக்கனியே
யம்பலமாடரங்காக
வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்
தொண்டனேன்விளம்புமாவிளம்பே. (க)

2 இடர்கெடுத்தென்னையாண்டுகொண்டென்னு
ளிருட்பிழம்பறவெறிந்தெழுந்த
சுடர்மணிவிளக்கினுள்ளொளிவிளங்குந்
தூயநற்சோதியுட்சோதீ
அடல்விடைப்பாகாவம்பலக்கூத்தா
வயனொடுமாலறியாமை
படரொளிபரப்பிப்பரந்துநின்றாயைத்
தொண்டனேன்பணியுமாபணியே. (உ)

3 தற்பரம்பொருளேசசிகண்டசிகண்டா
சாமகண்டாவண்டவாணா
நற்பெரும்†பொருளேயுரைகலந்துன்னை
யென்னுடைநாவினாலவில்வான்

(பிரதிபேதம்) * திருமாளிகைப் பெருமான் † பொருளா

அற்பனென்னுள்ளத்தளவிலாவுன்னைத்
தந்தபொன்னம்பலத்தாடி
கற்பமாயுலகாயல்லையானுயைத்
தொண்டனேன்கருதுமாகருதே. (௩)

4 பெருமையிற்சிறுமைபெண்ணொடாணுயென்
பிறப்பிறப்பறுத்தபேரொளியே
கருமையில்வெளியேகயற்கண்ணிமவான்
மகளுமையவள்களைகண்ணே
அருமையின்மறைநான்கோலமிட்டாற்று
மப்பனேயம்பலத்* தமுதே
ஒருமையிற்†பலபுக்குருவின்றுயைத்
தொண்டனேனுரைக்குமாறுரையே. (௪)

5 கோலமேமேலவானவர்கோவே
குணங்குறியிறந்ததோர்குணமே
காலமேகங்கைநாயகாவெங்கள்
காலகாலாகாமநாசா
ஆலமேயமுதுண்டம்பலஞ்செம்பொற்
கோயில்கொண்டாடவல்லானே
ஞாலமேதமியேனற்றவத்தாயைத்
தொண்டனேனணுகுமாநணுகே. (௫)

6 நீறணிபவளக்குன்றமேநின்ற
நெற்றிக்கண்ணுடையதோர்நெருப்பே
வேறணிபுவனபோகமேயோக
வெள்ளமேமேருவில்வீரா
ஆறணிசடையெம்மற்புதக்கூத்தா
வம்பொன்செயம்பலத்தரசே
ஏறணிகொடியெம்மீசனேயுன்னைத்
தொண்டனேனிசையுமாறிசையே. (௬)

7 தனதனற்றோழாசங்கராசூல
பாணியேதாணுவேசிவனே
கனகநற்றூணேகற்பகக்கொழுந்தே
கண்கண்மூன்றுடையதோர்கரும்பே
அனகனேகுமரவிநாயகசனக
வம்பலத்தமரர்சேகரனே
நுனகழலிணையென்னெஞ்சினுள்ளினிதாய்த்
தொண்டனேனுகருமாநுகரே. (௭)

(பி - ம்.) * தாடி † பலவுக்

8 திறம்பியபிறவிச்சிலதெய்வநெறிக்கே
திகைக்கின்றேனைத்திகையாமே
நிறம்பொன்னுமின்னுநிறைந்தசேவடிக்கீழ்
நிகழ்வித்தநிகரிலாமணியே
அறம்பலதிறங்கண்டருந்தவர்க்கரசா
யாலின்கீழிருந்தவம்பலவா
புறஞ்சமண்புத்தர்பொய்கள்கண்டாயைத்
தொண்டனேன்புணருமாபுணரே. (அ)

9 தக்கனற்றலையுமெச்சவன்றலையுந்
தாமரைநான்முகன்றலையும்
ஒக்கவிண்டுருளவொண்டிருப்புருவ
நெறித்தருளியவுருத்திரனே
அக்கணிபுலித்தோலாடைமேலாடை
யாடப்பொன்னம்பலத்தாடும்
சொக்கனேயெவர்க்குந்தொடர்வரியாயைத்
தொண்டனேன்றொடருமாதொடரே. (௯)

10 மடங்கலாய்க்கனகன்மார்புகீண்டானுக்
கருள்புரிவள்ளலேமருளார்
இடங்கொண்முப்புரம்வெந்தவியவைதிகத்தே
ரேறியவேறுசேவகனே
அடங்கவல்லரக்க*னரட்டிருவரைக்கீ
ழடர்த்தபொன்னம்பலத்தரசே
விடங்கொள்கண்டத்தெம்விடங்கனேயுன்னைத்
தொண்டனேன்விரும்புமாவிரும்பே. (க0)

11 மறைகளுமமரர்கூட்டமுமாட்டா
தயன்றிருமாலொடுமயங்கி
முறைமுறைமுறையிட்டோர்ப்பரியாயை
மூர்க்கனேன்மொழிந்தபுன்மொழிகள்
அறைகழலரன்சீரறிவிலாவெறுமைச்
சிறுமையிற்பொறுக்குமம்பலத்துள்
நிறைதருகருணைநிலயமேயுன்னைத்
தொண்டனேனினையுமாநினையே. (கக)

திருச்சிற்றம்பலம்

---

(பி - ம்.) * னருட்டிரு

## 2. கோயில் - உயர்கொடியாடை

பண் - பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்**

*பாதாதிகேசம்*

12 உயர்கொடியாடைமிடைபடலத்தி
னோமதூமப்படலத்தின்
*பியர்நெடுமாடத்தகிற்புகைப்படலம்
பெருகியபெரும்பற்றப்புலியூர்ச்
சியரொளிமணிக†ணிரந்தசெங்கனக
நிறைந்தசிற்றம்பலக்கூத்தா
மயர‡றுமமரர்மகுடந்தோய்மலர்ச்சே
வடிகளென்மனத்துவைத்தருளே. (௧)

13 கருவளர்மேகத்தகடுதோய்மகுடக்
கனகமாளிகைகலந்தெங்கும்
பெருவளமுத்தீநான்மறைத்தொழிலா
லெழின்மிகுபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்தெய்வப்பதிவிதிநிதியந்
திரண்டசிற்றம்பலக்கூத்தா
உருவளரின்பச்சிலம்பொலியலம்பு
முன்னடிக்கீழதென்னுயிரே. (௨)

14 வரம்பிரிவாளைமிளிர்மடுக்கமலங்
கரும்பொடுமாந்திடுமேதி
¶பிரம்பிரிசெந்நெற்கழனிசெங்கழுநீர்ப்
பழனஞ்சூழ்பெரும்பற்றப்புலியூர்ச்
சிரம்புரைமுடிவானவரடிமுறையா
லிறைஞ்சுசிற்றம்பலக்கூத்தா
நிரந்தரமுனிவர்நினைதிருக்கணைக்கா
ணினைந்துநின்றொழிந்ததென்னெஞ்சே. (௩)

15 தேர்மலிவிழவிற்குழலொலிதெருவிற்
கூத்தொலியேத்தொலியோத்தின்
பேரொலிபரந்துகடலொலிமலியப்
பொலிதருபெரும்பற்றப்புலியூர்ச்
சீர்நிலவிலயத்திருநடத்தியல்பிற்
றிகழ்ந்தசிற்றம்பலக்கூத்தா
வார்மலிமுலையாள்வருடியதிரண்மா
மணிக்குறங்கடைந்ததென்மதியே. (௪)

---

**(பி - ம்.)** * பெயர் † ணிரந்துசேர் ‡ மயர்வறு ¶ பரம்பிரி

16 நிறைதழைவாழைநிழற்கொடிநெடுந்தெங்
இளங்கமுகுளங்கொணீள்பலமாப்
* பிறைதவழ்பொழில்சூழ்கிடங்கிடைப்பதண
முதுமதிற்பெரும்பற்றப்புலியூர்ச்
சிறைகொணீர்த்தரளத்திரள்கொணித்திலத்த
செம்பொற்சிற்றம்பலக்கூத்தா
பொறையணிநிதம்பப்புலியதளாடைக்
கச்சுநூல்புகுந்ததென்புகலே. (ரு)

17 அதுமதியிதுவென்றலந்தலைநூல்கற்
றழைப்பொழிந்தருமறையறிந்து
பிதுமதிவழிநின்றொழிவிலாவேள்விப்
பெரியவர்பெரும்பற்றப்புலியூர்ச்
செதுமதிச்சமணுந்தேரருஞ்சேராச்
செல்வச்சிற்றம்பலக்கூத்தா
மதுமதிவெள்ளத்திருவயிற்றுந்தி
வளைப்புண்டென்னுளமகிழ்ந்ததுவே. (சு)

18 பொருவரைப்புயத்தின்மீமிசைப்புலித்தோல்
பொடியணிபூணநூலகலம்
பெருவரைபுரைதிண்டோளுடன்காணப்
பெற்றவர்பெரும்பற்றப்புலியூர்த்
திருமருவுதரத்தார்திசையடைப்ப
நடஞ்செய்சிற்றம்பலக்கூத்தா
உருமருவுதரத்தனிவடந்†தொடர்ந்து
கிடந்ததென்னுணர்வுணர்ந்துணர்ந்தே. (எ)

19 கணியெரிவிசிறுகரந்துடிவிடவாய்க்
கங்கணஞ்செங்கைமற்றபயம்
பிணிகெடவிவைகண்டரன்பெருநடத்திற்
பிரிவிலார்பெரும்பற்றப்புலியூர்த்
திணிமணிநீலகண்டத்தென்னமுதே
சீர்கொள்சிற்றம்பலக்கூத்தா
அணிமணிமுறுவற்பவளவாய்ச்செய்ய
சோதியுளடங்கிற்றென்னறிவே. (அ)

20 திருநெடுமாலிந்திரனயன்வானோர்
திருக்கடைக்காவலினெருக்கிப்
பெருமுடிமோதியுகுமணிமுன்றிற்
பிறங்கியபெரும்பற்றப்புலியூர்ச்

---

(பி - ம்.) * பிறையணி † துடர்ந்து

செருநெடுமேருவில்லின்முப்புரந்தீ
விரித்தசிற்றம்பலக்கூத்தா
கருவடிகுழைகாதமலச்செங்கமல
மலர்முகங்கலந்ததென்கருத்தே. (கூ)

21 ஏர்கொள்கற்பகமொத்திருசிலைப்புருவம்
பெருந்தடங்கண்கண்மூன்றுடையோன்
பேர்களாயிரநூறுயிரம்பிதற்றும்
பெற்றியோர்பெரும்பற்றப்புலியூர்ச்
சீர்கொள்கொக்கிறகுங்கொன்றையுந்துன்று
சென்னிச்சிற்றம்பலக்கூத்தா
நீர்கொள்செஞ்சடைவாழ்புதுமதிமத்த
நிகழ்ந்தவென்சிந்தையுணிறைந்தே. (கo)

22 காமனைக்காலன்றக்கன்மிக்கெச்சன்
படக்கடைக்கணித்தவனல்லாப்
பேய்மனம்பிறிந்தசிவப்பெருந்தொண்டர்
தொண்டனேன்பெரும்பற்றப்புலியூர்ச்
சேமநற்றில்லைவட்டங்கொண்டாண்ட
செல்வச்சிற்றம்பலக்கூத்தா
பூமலரடிக்கீழ்ப்புராணபூதங்கள்
பொறுப்பரொன்புன்சொலின்பொருளே. (கக)

திருச்சிற்றம்பலம்

---

## ௩. கோயில் - உறவாகியயோகம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

23 உறவாகியயோகமும்போகமுமா
யுயிராளியென்னுமென்பொன்னொருநாட்
சிறவாதவர்புரஞ்செற்றகொற்றச்
சிலைகொண்டுபன்றிப்பின்சென்றுநின்ற
மறவாவென்னும்மணிநீரருவி
மயேந்திரமாமலைமேலுறையும்
குறவாவென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (க

24 காடாடுபல்கணஞ்சூழக்கேழற்
கடுவிருணெடும்பகற்கானடந்த
வேடாமயேந்திரவெற்பாவென்னும்
வினையேன்மடந்தைவிம்மாவெருவும்
சேடாவென்னுஞ்செல்வமூவாயிரஞ்
செழுஞ்சோதியந்தணர்செங்கைதொழும்
கோடாவென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௨)

25 கானேவருமுரணேனமெய்த
களியார்புளினநற்காளாயென்னும்
வானேதடவுநெடுங்குடுமி
மயேந்திரமாமலைமேலிருந்த
தேனேயென்னுந்தெய்வவாய்மொழியார்
திருவாளர்மூவாயிரவர்தெய்வக்
கோனேயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௩)

26 வெறியேறுபன்றிப்பின்சென்றொருநாள்
விசயற்கருள்செய்தவேந்தேயென்னும்
மறியேறுசாரன்மயேந்திரமா
மலைமேலிருந்தமருந்தேயென்னும்
நெறியேயென்னுநெறிநின்றவர்க
ணினைக்கின்றநீதிவேதாந்தநிலைக்
குறியேயென்னுங்குணக்குன்றேயென்னும்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (சு)

27 செழுந்தென்றலன்றிலித்திங்கள்கங்கு
றிரைவீரைதீங்குழல்சேவின்மணி
எழுந்தின்றென்மேற்பகையாடவாடு
மெனைநீநலிவதென்னென்னேயென்னும்
அழுந்தாமயேந்திரத்தந்தரப்புட்
கரசுக்கரசேயமரர்தனிக்
கொழுந்தேயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (ரு)

28 வண்டார்குழலுமைநங்கைமுன்னே
மயேந்திரச்சாரல்வராகத்தின்பின்
* கண்டாரகலவில்லாடிவேடர்
கடிநாயுடன்கைவளைந்தாயென்னும்

(பி - ம்.) * கண்டார்கவல

பண்டாயமாலயன் றக்கனெச்சன்
பகலோனனல்பகற்பற்பசுங்கண்
கொண்டாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௬)

29 கடுப்பாய்ப்பறைகறங்கக்கடுவெஞ்
சிலையுங்கணையுங்கவணுங்கைக்கொண்
டுடுப்பாயதோல்செருப்புச்சுரிகை
வராகமுன்னோடிவிளியுளைப்ப
நடப்பாய்மயேந்திரநாதநாதாந்தத்
தரையாவென்பார்க்குநாதாந்தபதம்
கொடுப்பாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௭)

30 சேவேந்துவெல்கொடியானேயென் னுஞ்
சிவனேயென்சேமத்துணையேயென் னும்
மாவேந்துசாரன்மயேந்திரத்தில்
வளர்நாயகாவிங்கேவாராயென் னும்
பூவேந்திமூவாயிரவர்தொழப்
புகழேந்துமன்றுபொலியநின்ற
கோவேயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௮)

31 தரவார்புனஞ்சுனைதாழருவித்
தடங்கல்லுறையுமடங்கலமர்
மரவார்பொழிலெழில்வேங்கையேங்கு
மழைசூழ்மயேந்திரமாமலைமேற்
சுரவாவென் னுஞ்சுடர்நீண்முடிமா
லயனிந்திரன்முதற்றேவர்க்கெல்லாம்
குரவாவென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௯)

32 திருநீறிடாவுருத்தீண்டேனென் னுந்
திருநீறுமெய்த்திருமுண்டந்தீட்டிப்
பெருநீலகண்டன்றிறங்கொண்டிவள்
பிதற்றிப்பெருந்தெருவேதிரியும்
வருநீரருவிமயேந்திரப்பொன்
மலையின்மலைமகளுக்கருளும்
குருநீயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௧௦)

33 உற்றாயென் னுமுனையன் றிமற்றொன்
றுணரேனென் னுமுணர்வுள்கலக்கப்
பெற்றாயவைந்தெழுத்தும்பிதற்றிப்
பிணிதீர்வெண்ணீ றிடப்பெற்றேனென் னும்
சுற்றாயசோதிமயேந்திரஞ்சூழ
மனத்திருள்வாங்கிச்சூழாதநெஞ்சிற்
குற்றாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (கக)

34 வேறாகவுள்ளத்துவகைவிளைத்
தவனிச்சிவலோகவேதவென் றி
மாறாதமூவாயிரவரையு
மெனையுமகிழ்ந்தாளவல்லாயென் னும்
ஆறார்சிகரமயேந்திரத்துன்
னடியார்பிழைபொறுப்பாயமுதொர்
கூறாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (கஉ)

திருச்சிற்றம்பலம்

---

## ச. கோயில் - இணங்கிலாவீசன்

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

35 இணங்கிலாவீசனேசத்திருந்தசித்தத்தினேற்கு
மணங்கொள்சீர்த்தில்லைவாணன்மணவடியார்கள்வண்மைக்
குணங்களைக்கூறாவீறில்கோறைவாய்ப்பீறற்குண்டப்
பிணங்களைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (க)

36 எட்டுருவிரவியென்னையாண்டவனீண்டுசோதி
விட்டிலங்கலங்கற்றில்லைவேந்தனைச்சேர்ந்திலாத
துட்டரைத்தூர்த்தவார்த்தைத்தொழும்பரைப்பிழம்புபசும்
பிட்டரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (உ)

37 அருட்டிரட்செம்பொற்சோதியம்பலத்தாடுகின்ற
இருட்டிரட்கண்டத்தெம்மானின்பருக்கன்புசெய்யா
அரட்டரையரட்டுப்பேசுமழுக்கரைக்கழுக்களாய
பிரட்டரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (ங)

பண்டாயமாலயன் றக்கனெச்சன்
பகலோனனல்பகற்பற்பசுங்கண்
கொண்டாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (சு)

29 கடுப்பாய்ப்பறைகறங்கக்கடுவெஞ்
சிலையுங்கணையுங்கவணுங்கைக்கொண்
டுடுப்பாயதோல்செருப்புச்சுரிகை
வராகமுன்றேடிவிளியுளைப்ப
நடப்பாய்மயேந்திரநாதநாதாந்தத்
தரையாவென்பார்க்குநாதாந்தபதம்
கொடுப்பாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (எ)

30 சேவேந்துவெல்கொடியானேயென் னுஞ்
சிவனேயென்சேமத்துணையேயென் னும்
மாவேந்துசாரன்மயேந்திரத்தில்
வளர்நாயகாவிங்கேவாராயென் னும்
பூவேந்திமூவாயிரவர்தொழப்
புகழேந்துமன்றுபொலியநின்ற
கோவேயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (அ)

31 தரவார்புனஞ்சுனைதாழருவித்
தடங்கல்லுறையுமடங்கலமர்
மரவார்பொழிலெழில்வேங்கையெங்கு
மழைசூழ்மயேந்திரமாமலைமேற்
சுரவாவென் னுஞ்சுடர்நீண்முடிமா
லயனிந்திரன்முதற்றேவர்க்கெல்லாம்
குரவாவென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (கூ)

32 திருநீறிடாவுருத்தீண்டேனென் னுந்
திருநீறுமெய்த்திருமுண்டந்தீட்டிப்
பெருநீலகண்டன்றிறங்கொண்டிவள்
பிதற்றிப்பெருந்தெருவேதிரியும்
வருநீரருவிமயேந்திரப்பொன்
மலையின்மலைமகளுக்கருளும்
குருநீயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (க0)

33 உற்றாயென் னுழையன் றிமற் றொன்
றுணரேனென் னுமுணர்வுள் கலக்கப்
பெற்றாயவைங் கெழுத் தும்பி தற்றிப்
பிணிதீர்வெண் ணீறிடப்பெற்றேனென் னும்
சுற்றாயசோதிமயேந்திரஞ்சூழ
மனத்திருள்வாங்கிச்சூழாதநெஞ்சிற்
குற்றாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௧௧)

34 வேறாகவுள்ளத்துவகைவிளைத்
தவனிச்சிவலோகவேதவென்றி
மாறாதமூவாயிரவரையு
மெனையுமகிழ்ந்தாளவல்லாயென் னும்
ஆறார்சிகரமயேந்திரத்துன்
னடியார்பிழைபொறுப்பாயமுதொர்
கூறாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௧௨)

திருச்சிற்றம்பலம்

---

## ௪. கோயில் - இணங்கிலாவீசன்

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

35 இணங்கிலாவீசனேசத்திருந்தசித்தத்தினேற்கு
மணங்கொள்சீர்த்தில்லைவாணன்மணவடியார்கள்வண்மைக்
குணங்களைக்கூறாவீறில்கோறைவாய்ப்பீறற்குண்டப்
பிணங்களைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௧)

36 எட்டுருவிரவியென்னையாண்டவனீண்டுசோதி
விட்டிலங்கலங்கற்றில்லைவேந்தனைச்சேர்ந்திலாத
துட்டரைத்தூர்த்தவார்த்தைத்தொழும்பரைப்பிழம்புப்பசும்
பிட்டரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௨)

37 அருட்டிரட்செம்பொற்சோதியம்பலத்தாடுகின்ற
இருட்டிரட்கண்டத்தெம்மானின்பருக்கன்புசெய்யா
அரட்டரையரட்டுப்பேசுமழுக்கரைக்கழுக்களாய
பிரட்டரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௩)

38 துணுக்கெனவயனுமாலுந்தொடர்வருஞ்சுடராயிப்பால்
அணுக்கருக்கணியசெம்பொனம்பலத்தாடிக்கல்லாச்
சிணுக்கரைச்செத்தற்கொத்தைச்சிதம்பரைச்சீத்தையூத்தைப்
பிணுக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௪)

39 திசைக்குமிக்குலவு*கீர்த்தித்தில்லைக்கூத்துகந்துதீய
நசிக்கவெண்ணீறதாடிநமர்களைநணுகாநாய்கள்
அசிக்கவாரியங்களோதுமாதரைப்பேதவாதப்
பிசுக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௫)

40 ஆடரவாடவாடுமம்பலத்தமிர்தேயென்னும்
சேடர்சேவடிகள்சூடாத்திருவிலாவுருவிலாரைச்
சாடரைச்சாட்கைமோட்கச்சழக்கரைப்பிழக்கப்பிட்கப்
பேடரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௬)

41 உருக்கியென்னுள்ளத்துள்ளேயூறலந்தேறன்மாறாத்
திருக்குறிப்பருளுந்தில்லைச்செல்வன்பாற்செல்லுஞ்செல்வின்
அருக்கரையள்ளல்வாயகள்ளரையவியாப்பாவப்
பெருக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௭)

42 செக்கரொத்திரவிநூறாயிரத்திரளொப்பாந்தில்லைச்
சொக்கரம்பலவரென்னுஞ்சுருதியைக்கருதமாட்டா
எக்கரைக்குண்டாமிண்டவெத்தரைப்புத்தராதிப்
பொக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௮)

43 எச்சனைத்தலையைக்கொண்டுசெண்டடித்திடபமேறி
அச்சங்கொண்டமரரோடநின்றவம்பலவற்கல்லாக்
கச்சரைக்கல்லாப்பொல்லாககயவரைப்பசுநூல்கற்கும்
பிச்சரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௯)

44 விண்ணவர்மகுடகோடிமிடைந்தொளிமணிகள்வீசும்
அண்ணலம்பலவன்கொற்றவாசலுக்காசையில்லாத்
தெண்ணரைத்தெருளாவுள்ளத்திருளரைத்திட்டைமுட்டைப்
பெண்ணரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௧௦)

45 சிறப்புடையடியார்தில்லைச்செம்பொனம்பலவற்காளாம்
உறைப்புடையடியார்கீழ்கீழுறைப்பார்சேவடிநீறாடார்
இறப்பொடுபிறப்பினுக்கேயினியராய்மீண்டுமீண்டும்
பிறப்பரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

---

(பி - ம்.) * சீர்த்தித்

# சேந்தனார் திருவிசைப்பா

## க. திருவீழிமிழலை

பண் - பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்**

46 ஏகநாயகனையிமையவர்க்கரசை
யென்னுயிர்க்கமுதினையெதிரில்
போகநாயகனைப்புயல்வணற்கருளிப்
பொன்னெடுஞ்சிவிகையாவூர்ந்த
மேகநாயகனைமிகுதிருவீழி
மிழலைவிண்ணிழிசெழுங்கோயில்
யோகநாயகனையன்றிமற்றொன்று
முண்டெனவுணர்கிலேன்யானே. (க)

47 கற்றவர்விழுங்குங்கற்பகக்கனியைக்
கரையிலாக்கருணைமாகடலை
மற்றவரறியாமாணிக்கமலையை
மதிப்பவர்மனமணிவிளக்கைச்
செற்றவர்புரங்கள்செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலைவீற்றிருந்த
கொற்றவன்றன்னைக்கண்டுகண்டுள்ளங்
குளிரவென்கண்குளிர்ந்தனவே. (உ)

48 மண்டலத்தொளியைவிலக்கியானுகர்ந்த
மருந்தையென்மாறிலாமணியைப்
பண்டலரயன்மாற்கரிதுமாயடியார்க்
கெளியதோர்பவளமால்வரையை
விண்டலர்மலர்வாய்வேரிவார்பொழில்சூழ்
திருவீழிமிழலையூராளுங்
கொண்டலங்கண்டத்தெங்குருமணியைக்
குறுகவல்வினைகுறுகாவே. (ஙு)

49 தன்னடிநிழற்கீழென்னையுந்தகைத்த
சசிகுலாமவுலியைத்தானே
என்னிடைக்கமலமூன்றினுட்டோன்றி
யெழுஞ்செழுஞ்சுடரினையருள்சேர்
மின்னெடுங்கடலுள்வெள்ளத்தைவீழி
மிழலையுள்விளங்குவெண்பளிங்கின்
பொன்னடிக்கடிமைபுக்கினிப்போக
விடுவனோபூண்டுகொண்டேனே. (ச)

50 இத்தெய்வநெறிநன்றென்றிருண்மாயப்
பிறப்பறுவிந்திரசாலப்
பொய்த்தெய்வநெறிநான்புகாவகைபுரிந்த
புராணசிந்தாமணிவைத்த
மெய்த்தெய்வநெறிநான்மறையவர்வீழி
மிழலைவிண்ணிழிசெழுங்கோயில்
அத்தெய்வநெறியிற்சிவமலாதவமு
மறிவரோவறிவுடையோரே. (௬)

51 அக்கனுவனையசெல்வமேசிந்தித்
தைவரோட்டழுந்தியானவமே
புக்கிடாவண்ணங்காத்தெனையாண்ட
புனிதனைவனிதைபாகனையெண்
டிக்கெலாங்குலவும்புகழ்த்திருவீழி
மிழலையான்றிருவடிநிழற்கீழ்ப்
புக்குநிற்பவர்தம்பொன்னடிக்கமலப்
பொடியணிந்தடிமைபூண்டேனே. (௬)

52 கங்கைநீரரிசிற்கரையிருமருங்குங்
கமழ்பொழிறழுவியகழனித்
திங்கணேர்தீண்டநீண்டமாளிகைசூழ்
மாடநீடுயர்திருவீழித்
தங்குசீர்ச்செல்வத்தெய்வத்தான்றோன்றி
நம்பியைத்தன்பெருஞ்சோதி
மங்கையோர்பங்கத்தென்னருமருந்தை
வருந்திநான்மறப்பனோவினியே. (எ)

53 ஆயிரங்கமலஞாயிறுயிராமுக்
கண்முககரசரணத்தோன்
பாயிருங்கங்கைபனிநிலாக்கரந்த
படர்சடைமின்னுபொன்முடியோன்
வேயிருந்தோளியுமைமணவாளன்
விரும்பியமிழலைசூழ்பொழிலைப்
போயிருந்தேயும்போற்றுவார்கழல்கள்
போற்றுவார்புரந்தராதிகளே. (அ)

54 எண்ணில்பல்கோடிசேவடிமுடிக
ளெண்ணில்பல்கோடிதிண்டோள்கள்
எண்ணில்பல்கோடிதிருவுருநாம
மேர்கொண்மூக்கண்முகமியல்பும்
எண்ணில்பல்கோடியெல்லைக்கப்பாலாய்
நின்றைஞ்ஞூற்றந்தணரேத்தும்
எண்ணில்பல்கோடிகுணத்தரோர்வீழி
யிவர்நம்மையாளுடையாரே. (௯)

55 தக்கன்வெங்கதிரோன்சலந்தரன்பிரமன்
சந்திரனிந்திரனெச்சன்
மிக்கநெஞ்சரக்கன்புரங்கரிகருடன்
மறலிவேளிவர்மிகைசெகுத்தோன்
திக்கெலாநிறைந்தபுகழ்த்திருவீழி
மிழலையான்றிருவடிநிழற்கீழ்ப்
புக்கிருந்தவர்தம்பொன்னடிக்கமலப்
பொடியணிந்தடிமைபூண்டேனே. (கo)

56 உளங்கொளமதுரக்கதிர்விரித்துயிர்மே
லருள்சொரிதருமுமாபதியை
வளங்கிளர்நதியுமதியமுஞ்சூடி
மழவிடைமேல்வருவானை
விளங்கொளிவீழிமிழலைவேந்தேயென்
றுந்தனைச்சேர்ந்தன்றுதையையான்
களங்கொளவழைத்தாற்பிழைக்குமோவடியேன்
கைக்கொண்டகனககற்பகமே. (கக)

57 பாடலங்காரப்பரிசில்காசருளிப்
பழுத்தசெந்தமிழ்மலர்சூடி
நீடலங்காரத்தெம்பெருமக்க
ணெஞ்சினுணிறைந்துநின்றானை
வேடலங்காரக்கோலத்தினமுதைத்
திருவீழிமிழலையூராளும்
கேடிலங்கீர்த்திக்கனககற்பகத்தைக்
கெழுமுதற்கெவ்விடத்தேனே. (கஉ)

திருச்சிற்றம்பலம்

---

## உ. திருவாவடுதுறை

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

58 பொய்யாதவேதியர்சாந்தைமெய்ப்புகழாளராயிரம்பூசுரர்
மெய்யேதிருப்பணிசெய்சீர்மிகுகாவிரிக்கரைமேய
ஐயாதிருவாவடுதுறையமுதேயென்றுன்னையழைத்தக்கால்
மையார்தடங்கண்மடந்தைக்கொன்றருளாதொழிவதுமாதிமை
[யே.

59 மாதிமணங்கமழும்பொழின்மணிமாடமாளிகைவீதிசூழ்
சோதிமதிலணிசாந்தைமெய்ச்சுருதிவிதிவழியோர்தொழும்
ஆதியமரர்புராணனும்மணியாவடுதுறைநம்பிநின்ற
நீதியறிகிலர்பொன்னெடுந்திண்டோள்புணரநினைக்குமே. (உ)

60 நினைக்குநிரந்தரனேயென்னுநிலாக்கோலச்செஞ்சடைக்கங்கைநீர், நனைக்குநலங்கிளர்கொன்றைமேனயம்பேசுநன்னுதனங்கைமீர், மனக்கின்பவெள்ளமலைமகண்மணவாளநம்பிவண்சாந்தையூர், தனக்கின்பனாவடுதண்டுறைத்தருணேந்துசேகரனென்னுமே. (ங)

61 தருணேந்துசேகரனேயெனுந்தடம்பொன்னித்தென்கரைச்சாந்தையூர்ப், பொருணேர்ந்தசிந்தையவர்தொழப்புகழ்செல்வமல்குபொற்கோயிலுள், அருணேர்ந்தமர்திருவாவடுதுறையாண்டவாண்டகையம்மானே,தெருணேர்ந்தசித்தம்வலியவாதிலகநுதலிதிறத்திலே. (ச)

62 திலகநுதலுமைநங்கைக்குந்திருவாவடுதுறைநம்பிக்கும், குலகவடியவர்க்கென்னையாட்கொடுத்தாண்டுகொண்டகுணக்கடல், அலதொன்றறிகின்றிலேமெனுமணியும்வெண்ணீறஞ்செழுத்தலால், வலதொன்றிலளிதற்கென்செய்கேன்வயலந்தண்சாந்தையர்வேந்தனே.

63 வேந்தன்வளைத்ததுமேருவில்லரவுநாண்வெங்கணைசெங்கண்மால், போந்தமதிலணிமுப்புரம்பொடியாடவேதப்புரவித்தேர், சாந்தைமுதலயன்சாரதிகதியருளென்னுமித்தையலை, ஆந்தண்டிருவாவடுதுறையரன்செய்கையாரறிகிற்பரே. (சு)

64 கிற்போமெனத்தக்கன்வேள்விபுக்கெடுத்தோடிக்கெட்டவத்தேவர்கள், சொற்போலுமெய்ப்பயன்பாவிகாளென்சொல்லிச்சொல்லுமித்துமொழி, கற்போன்மனங்கனிவித்தவெங்கருணையாவந்திடாயென்றுற்,பெற்போபெருக்திருவாவடுதுறையாளிபேசாதொழிவதே. (எ)

65 ஒழிவொன்றிலாவுண்மைவண்ணமுமுலப்பிலளூறின்பவெள்ளமும், ஒழிவொன்றிலாப்பொன்னித்தீர்த்தமுமுனிகோடிகோடியாமூர்த்தியும்,அழிவொன்றிலாச்செல்வச்சாந்தையூரணியாவடுதுறையாடினாள், இழிவொன்றிலாவகையெய்திநின்றிறுமாக்குமென்னிளமானனே. (அ)

66 மானேர்கலைவளையுங்கவர்ந்துளங்கொள்ளைகொள்ளவழக்குண்டே, தேனேயமுதேயென்சித்தமேசிவலோகநாயகச்செல்வமே, யானேயலம்புனற்பொன்னியணியாவடுதுறையன்பர்தம், கோனேநின்மெய்யடியார்மனக்கருத்தைமுடித்திடுங்குன்றமே. (கூ)

67 குன்றேந்திகோகனதத்தயனறியாநெறியென்னைக்கூட்டினாய்
என்றேறங்கியேங்கியழைக்கின்றாளிளவல்லியெல்லைகடந்தனள்
அன்றேயலம்புனற்பொன்னியணியாவடுதுறையாடினாள்
நன்றேயிவணம்பரமல்லணவலோகநாயகன்பாலளே. (க0)

68 பாலுமமுதமுந்தேனுமாயானந் தந்துள்ளேபாலிப்பான்
போலுமெனாருயிர்ப்போகமாம்புரகாலகாமபுராந்தகன்
சேலுங்கயலுந்திளைக்குநீர்த்திருவாவடுதுறைவேந்தனோ
டாலுமதற்கேமுதலுமாமறிந்தோமரிவைபொய்யாததே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

---

## ௩. திருவிடைக்கழி

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

69 மாலுலாமனந்தந்தென்கையிற்சங்கம்வவ்வினான்மலைமகண்மதலை, மேலுலாந்தேவர்குலமுழுதாளுங்குமரவேள்வள்ளிதன்மணாளன், சேலுலாங்கழனித்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, வேலுலாந்தடக்கைவேந்தனென்சேந்தனென்னுமென்மெல்லியலிவளே. (௧)

70 இவளைவாரிளமென்கொங்கைபீர்பொங்கவெழில்கவர்ந்தானிளங்காளை, கவளமாகரிமேற்கவரிசூழ்குடைக்கீழ்க்கனகக்குன்றெனவருங்கள்வன், திவளமாளிகைசூழ்திருவிடைக்கழியிற்றிருக்குரா நீழற்கீழ்நின்ற, குவளைமாமலர்க்கணங்கையாணயக்குங்குழகனல்லழகனங்கோவே. (௨)

71 கோவினைப்பவளக்குழமணக்கோலக்குழாங்கள்சூழ்கோழிவெல்கொடியோன், காவனற்சேனையென்னக்காப்பவனென்பொன்னைமேகலைகவர்வானே, தேவினற்றலைவன்றிருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, தூவிநற்பீலிமாமயிலூருஞ்சுப்பிரமண்ணியன்றானே. (௩)

72 தானமர்பொருதுவானவர்சேனைமடியச்சூர்மார்பினைத்தடிந்தோன், மானமர்தடக்கைவள்ளறன்பிள்ளைமறைநிறைசட்டறம்வளரத், தேனமர்பொழில்சூழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, கோனமர்கூத்தன்குலவிளங்களிறென்கொடிக்கிடர்பயப்பதுங்குணமே. (௪)

73 குணமணிக்குருளைக்கொவ்வைவாய்மடந்தைபடுமிடர்குறிக்கொளாதழகோ, மணமணிமறையோர்வானவர்வையமுய்யமற்றடியனேன்வாழத், திணமணிமாடத்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, கணமணிபொருநீர்க்கங்கைதன்சிறுவன்கணபதிபின்னிளங்கிளையே. (௫)

74 கிளையிளஞ்சேயக்கிரிதனைக் *கீண்டவாண்டகைகேடில்வேற்செல்வன், வளையிளம்பிறைச்செஞ்சடையரன்மதலைகார்நிறமாறிருமருகன், திளையிளம்பொழில்சூழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, முளையிளங்களிறென்மொய்குழற்சிறுமிக்கருளுங்கொன்முருகவேள்பரிந்தே. (சு)

75 பரிந்தசெஞ்சுடரோபரிதியோமின்னோபவளத்தின்குழவியோபசும்பொன், சொரிந்தசிந்துரமோதூமணித்திரளோசுந்தரத்தரசிதுவென்னத், தெரிந்தவைதிகர்வாழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, வரிந்தவெஞ்சிலைக்கைமைந்தனையஞ்சொன்மையல்கொண்டையுறும்வகையே. (எ)

76 வகைமிகும்சுரர்மாளவந்துழிஞைவாளமர்விளைத்ததாளாளன், புகைமிகுமனவிற்புரம்பொடிபடுத்தபொன்மலைவில்லிதன்புதல்வன், திகைமிகுகீர்த்தித்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, தொகைமிகுநாமத்தவன்றிருவடிக்கென்றுடியிடை †மடனொடங்கினளே. (அ)

77 தொடங்கினண்மடலென்றணிமுடித்தொங்கற்புறவிதழாகிலுமருளான், இடங்கொளக்குறத்திதிறத்திலுமிறைவன்மறத்தொழில்வார்த்தையுமுடையன், திடங்கொள்வைதிகர்வாழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, மடங்கலைமலரும்பன்னிருநயனத்தறுமுகத்தமுதினைமருண்டே. (கூ)

78 மருண்டுறைகோயின் மல்குநன்குன்றப்பொழில்வளர்மகிழ்திருப்பிடவூர், வெருண்டமான்விழியார்க்கருள் செயாவிடுமேவிடலையேயெவர்க்குமெய்யன்பர், தெருண்டவைதிகர்வாழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, குருண்டபூங்குஞ்சிப்பிறைச்சடைமுடிமுக்கண்ணுடைக்கோமளக்கொழுந்தே. (க௦)

79 கொழுந்திரள்வாயார் தாய்மொழியாகத்தூய் மொழியமரர்கோமகனைச், செழுந்திரட்சோதிச் ‡செப்புறைச்சேந்தன்வாய்ந்தசொல்லிவைசுவாமியையே, செழுந்தடம் ¶ பொழில்சூழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, எழுங்கதிரொளியையேத்துவார்கேட்பாரிடர்கெடுமாலுலாமனமே. (கக)

திருச்சிற்றம்பலம்

---

(பி - ம்.) * கீன்ற † மயனொடங் ‡ செப்புரைச் ¶ புடைசூழ்

# *கருவூர்த்தேவர் திருவிசைப்பா

## க. கோயில்

பண் - புறநீர்மை

**திருச்சிற்றம்பலம்**

80 *கணம்விரிகுடுமிச்செம்மணிக்கவைநாக்*
*கறையணற்கட்செவிப்பகுவாய்ப்*
*பணம்விரிதுத்திப்பொதிகொள்வெள்ளெயிற்றுப்*
*பாம்பணிபரமர் தங்கோயில்*
*மணம்விரிதருதேமாம்பொழின்மொழுப்பின்*
*மழைதவழ்வளரிளங்கமுகம்*
*திணர்நிரையரும்புபெரும்பற்றப்புலியூர்த்*
*திருவளர் திருச்சிற்றம்பலமே.* (க)

81 *இவ்வரும்பிறவிப்பௌவநீர்நீந்து*
*மேழையேற்கென்னுடன்பிறந்த*
*ஐவரும்பகையேயார்துணையென்றா*
*லஞ்சலென்றருள்செய்வான்கோயில்*
*கைவரும்பழனங்குழைத்தசெஞ்சாலிக்*
*கடைசியர்களைதருநீலம்*
*செய்வரம்பரும்புபெரும்பற்றப்புலியூர்த்*
*திருவளர் திருச்சிற்றம்பலமே.* (உ)

82 *தாயினேரிரங்குந் தலைவவோவென்றுந்*
*தமியனேன் றுணைவவோவென்றும்*
*நாயினேனிருந்துபுலம்பினாவிரங்கி*
*நலம்புரிபரமர் தங்கோயில்*
*வாயினேரரும்புமணிமுருக்கலர*
*வளரிளஞ்சோலைமாந்தளிர்செந்*
*தீயினேரரும்புபெரும்பற்றப்புலியூர்த்*
*திருவளர் திருச்சிற்றம்பலமே.* (ங)

83 *துந்துபிகுழல்யாழ்மொந்தைவானியம்பத்*
*தொடர்ந்திருடியர்கணந்துதிப்ப*
*நந்திகைமுழவமுகிலெனமுழங்க*
*நடம்புரிபரமர் தங்கோயில்*
*அந்தியின்மறைநான்காரணம்பொதிந்த*
*வரும்பெறன்மறைப்பொருண்மறையோர்*
*சிந்தையிலரும்புபெரும்பற்றப்புலியூர்த்*
*திருவளர் திருசசிற்றம்பலமே.* (ச)

---

**(பி - ம்.)** * *கருவூர்ப்பிரான்*

84 கண்பனியரும்பக்கைகண்மொட்டித்தென்
களைகணேயோலமென்றோலிட்
டென்பெலாமுருகுமன்பர்தங்கூட்டத்
தென்னையும்புணர்ப்பவன்கோயில்
பண்பலதெளிதேன்பாடிநின்றாடப்
பணிமலர்ச்சோலைசூழ்மொழுப்பிற்
செண்பகமரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (ரு)

85 நெஞ்சிடரகலவகம்புகுந்தொடுங்கு
நிலைமையோடிருள்கிழித்தெழுந்த
வெஞ்சுடர்சுடர்வபோன்றொளிதுளும்பும்
விரிசடையடிகடங்கோயில்
அஞ்சுடர்ப்புரிசையாழிசூழ்வட்டத்
தகம்படிமணிநிரைபரந்த
செஞ்சுடரரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (சு)

86 பூத்திரளுருவஞ்செங்கதிர்விரியாப்
புந்தியில்வந்தமால்விடையோன்
தூத்திரட்பளிங்கிற்றோன்றியதோற்றந்
தோன்றநின்றவன்வளர்கோயில்
நாத்திரண்மறையோர்ந்தோமகுண்டத்து
நறுநெயான்மறையவர்வளர்த்த
தீத்திரளரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (எ)

87 சீர்த்ததிண்புவனமுழுவதுமேனைத்
திசைகளோடண்டங்களனைத்தும்
போர்த்ததம்பெருமைசிறுமைபுக்கொடுங்கும்
புணர்ப்புடையடிகடங்கோயில்
ஆர்த்துவந்தமரித்தமரரும்பிறரு
மலைகடலிடுதிரைப்புனிதத்
தீர்த்தநீரரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (அ)

88 பின்னுசெஞ்சடையும்பிறைதவழ்மொழுப்பும்
பெரியதங்கருணையுங்காட்டி
அன்னைதேன்கலந்தின்னமுதுகந்தளித்தாங்
கருள்புரிபரமர்தங்கோயில்
புன்னைதேன்சொரியும்பொழிலகங்குடைந்து
பொறிவரிவண்டினம்பாடும்
தென்னதேனரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (கூ)

89 உம்பர்நாடிம்பர்விளங்கியாங்கெங்கு
மொளிவளர் திருமணிச்சுடர்கான்
றெம்பிரானடஞ்செய்சூழலங்கெல்லா
மிருட்பிழம்பறவெறிகோயில்
வம்புலாங்கோயில்கோபுரங்கூடம்
வளர்நிலைமாடமாளிகைகள்
செம்பொனலரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே. (௧௦)

90 இருந்திரைத்தரளப்பரவைசூழகலத்
தெண்ணிலங்கண்ணில்புன்மாக்கள்
திருந்துயிர்ப்பருவத்தறிவுறுகருவூர்த்
துறைவளர் தீந்தமிழ்மாலை
பொருந்தருங்கருணைப்பரமர்தங்கோயிற்
பொழிலகங்குடைந்துவண்டுறங்கச்
செருந்திநின்றரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே. (௧௧)

**திருச்சிற்றம்பலம்**

---

## ௨. திருக்களந்தையாதித்தேச்சரம்

பண் - புறநீர்மை

**திருச்சிற்றம்பலம்**

91 கலைகடம்பொருளுமறிவுமாயென்னைக்கற்பினிற்பெற்றெடுத்தெ
னக்கே,முலைகடந்தருளுந்தாயினுநல்லமுக்கணனுறைவிடம்போலும்,
மலைகுடைந்தனையநெடுநிலைமாடமருங்கெலாமறையவர்முறையோத்,
தலைகடன்முழங்குமந்தணீர்க்களந்தையணிதிகழாதித்தேச்சரமே.(௧)

92 சந்தனகளபந்துதைந்தநன்மேனித்தவளவெண்பொடிமுழுதா
டும், செந்தழலுருவிற்பொலிந்துநோக்குடையதிருநுதலவர்க்கிடம்
போலும், இந்தனவிலங்கலெறிபுனந்தீப்பட்டெரிவதொத்தெழு
நிலைமாடம்,அந்தணரழலோம்பலைபுனற்களந்தையணிதிகழாதித்தேச்
சரமே. (௨)

93 கரியரேயிடந்தான்செய்யரேயொருபாற்கழுத்திலோர்தனி
வடஞ்சேர்த்தி, முரிவரேமுனிவர்தம்மொடாலினிழற்கீழ்முறைதெரிந்
தோருடம்பினராம், இருவரேமுக்கணாற்பெருந்தடந்தோளிறைவரே
மறைகளுந்தேட, அரியரேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்
சரமே. (௩)

94 பழையராந்தொண்டர்க்கெளியரேமிண்டர்க்கரியரேபாவியேன்செய்யும், பிழையெலாம்பொறுத்தென்பிணிபொறுத்தருளாப்பிச்சரேநச்சராமிளிரும், குழையராய்வந்தென்குடிமுழுதாளுங் குழகரேயொழுகுநீர்க்கங்கை, அழகரேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (சு)

95 பவளமேமகுடம்பவளமேதிருவாய்பவளமேதிருவுடம்பதனில், தவளமேகளபந்தவளமேபுரிநூறவளமேமுறுவலாடரவம், துவளுமேகலையுந்துகிலுமேயொருபாற்றுடியிடையிடமருங்கொருத்தி, அவளுமேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (ரு)

96 நீலமேகண்டம்பவளமேதிருவாய்நித்திலநிரைத்திலங்கினவே, போலுமேமுறுவனிறையவானந்தம்பொழியுமேதிருமுகமொருவர், கோலமேயச்சோவழகிதேயென்றுகுழைவரேகண்டவருண்ட, தாலமேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (சு)

97 திக்கடாநினைந்துநெஞ்சிடிந்துருகுந்திறத்தவர்புறத்திருந்தலச,மைக்கடாவனையவென்னையாள்விரும்பிமற்றொருபிறவியிற்பிறந்து, பொய்க்கடாவண்ணங்காத்தெனக்கருளேபுரியவும்வல்லரேயெல்லே, அக்கடாவாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (எ)

98 மெய்யரேமெய்யர்க்கிடுதிருவானவிளக்கரேயெழுதுகோல்வளையாள், மையரேவையம்பலிதிரிந்துறையுமயானரேயுளங்கலந்திருந்தும், பொய்யரேபொய்யர்க்கடுத்தவான்பளிங்கின்பொருள்வழியிருள்கிழித்தெழுந்த, ஐயரேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (அ)

99 குமுதமேதிருவாய்குவளையேகளமுங்குழையதேயிருசெவியொருபால், விமலமேகலையுமுடையரேசடைமேன்மிளிருமேபொறிவரிநாகம்,கமலமேவதனங்கமலமேநயனங்கனகமேதிருவடிநிலைநீர், அமலமேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (கூ)

100 நீரணங்கசும்புகழனிசூழ்களந்தை நிறைபுகழாதித்தேச்சரத்து,நாரணன்பரவுந்திருவடிநிலைமேனலமலிகலைபயில்கருவூர், ஆரணமொழிந்தபவளவாய்சுரந்தவமுதமூறியதமிழ்மாலை, ஏரணங்கிருநான்கிரண்டிவைவல்லோரிருள்கிழித்தெழுந்தசிந்தையரே. (க௦)

திருச்சிற்றம்பலம்

# ௩. திருக்கீழ்க்கோட்டூர்மணியம்பலம்

பண் - பஞ்சமம்

## திருச்சிற்றம்பலம்

101 தளிரொளிமணிப்பூம்பதஞ்சிலம்பலம்பச்
சடைவிரித்தலையெறிகங்கைத்
தெளிரொளிமணிநீர்த்திவலைமுத்தரும்பித்
திருமுகமலர்ந்துசொட்டட்டக்
கிளரொளிமணிவண்டறைபொழிற்பழனங்
கெழுவு * கம்பலஞ்செய்கீழ்க்கோட்டூர்
வளரொளிமணியம்பலத்து † ணின்றாடு
மைந்தனென்மனங்கலந்தானே. (க)

102 துண்டவெண்பிறையும்படர்சடைமொழுப்புஞ்
சுழியமுஞ்சூலமுநீல
கண்டமுங்குழையும்பவளவாயிதழுங்
கண்ணுதற்றிலகமுங்காட்டிக்
கெண்டையுங்கயலுமுகளுநீர்ப்பழனங்
கெழுவுகம்பலஞ்செய்கீழ்க்கோட்டூர்
வண்டறைமணியம்பலத்து ‡ ணின்றாடு
மைந்தனென்மனங்கலந்தானே. (உ)

103 திருநுதல்விழியும்பவளவாயிதழுந்
திலகமுமுடையவன்சடைமேற்
புரிதருமலரின்றாதுநின்றூதப்
போய்வருந்தும்பிகாளிங்கே
கிரிதவழ்முகிலின்கீழ்த்தவழ்மாடங்
கெழுவுகம்பலஞ்செய்கீழ்க்கோட்டூர்
வருதிறன்மணியம்பலவனைக்கண்டென்
மனத்தையுங்கொண்டுபோதுமினே. (௩)

104 தெள்ளுநீறவனீறென்னுடல்விரும்புஞ்
செவியவனறிவுநூல்கேட்கு
மெள்ளவேயவன்பேர்விளம்பும்வாய்கண்கள்
விமானமேநோக்கிவெவ்வுயிர்க்கும்
கிள்ளைபூம்பொதும்பிற்கொஞ்சிமாம்பொழிற்கே
கெழுவுகம்பல்ஞ்செய்கீழ்க்கோட்டூர்
வள்ளலேமணியம்பலத்து ¶ ணின்றாடு
மைந்தனேயென்னுமென்மனனே. (௪)

(பி - ம்.) * கம்பலை † நின்றாடு ‡ நின்றாடு ¶ நின்றாடு

105 தோழியாஞ்செய்ததொழிலெனெம்பெருமான்
றுணைமலர்ச்சேவடிகாண்பான்
ஊழிதோறூழியுணர்ந்துளங்கசிந்து
நெக்குநைந்துளங்கரைந்துருக்கும்
கேழலும்புள்ளுமாகிநின்றிருவர்
கெழுவுகம்பலஞ்செய்கீழ்க்கோட்டூர்
வாழியமணியம்பலவனைக்காண்பான்
மயங்கவுமாலொழியோமே. (௫)

106 என்செய்கோந்தோழிதோழிநீதுணையா
யிரவுபோம்பகல்வருமாகில்
அஞ்சலோவென்னானாழியுந்திரையு
மலமருமாறுகண்டயர்வன்
கிஞ்சுகமணிவாயரிவையர்தெருவிற்
கெழுவுகம்பலஞ்செய்கீழ்க்கோட்டூர்
மஞ்சணிமணியம்பலவவோவென்று
மயங்குவன்மாலையம்பொழுதே. (௬)

107 தழைதவழ்மொழுப்புந்தவளநீற்றொளியுஞ்
சங்கமுஞ்சகடையின்முழக்கும்
குழைதவழ்செவியுங்குளிர்சடைத்தெண்டுங்
குண்டையுங்குழாங்கொடுதோன்றும்
கிழைதவழ்கனகம்பொழியுநீர்ப்பழனங்
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
மழைதவழ்மணியம்பலத்துணின்றாடு
மைந்தர்தம்வாழ்வுபோன்றதுவே. (௭)

108 தன்னகமழலைச்சிலம்பொடுசதங்கை
தமருகந்திருவடிதிருநீ
றின்னகைமழலைக்கங்கைகோங்கிதழி
யிளம்பிறைகுழைவளரிளமான்
கின்னரமுழவமழலையாழ்வீணை
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
மன்னவன்மணியம்பலத்துணின்றாடு
மைந்தனென்மனத்துள்வைத்தனனே. (௮)

109 யாதுநீநினைவதெவரையாமுடைய
தெவர்களும்யாவையுந்தானாய்ப்
பாதுகைமழலைச்சிலம்பொடுபுகுந்தென்
பனிமலர்க்கண்ணுணின்றகலான்
கேதகைநிழலைக்குருகெனமருவிக்
கெண்டைகள்வெருவுகீழ்க்கோட்டூர்
மாதவன்மணியம்பலத்துணின்றாடு
மைந்தனென்மனம்புகுந்தானே. (௯)

110 அந்திபோலுருவுமந்தியிற்பிறைசே
ரழகியசடையும்வெண்ணீறும்
சிந்தையானினையிற்சிந்தையுங்காணேன்
செய்வதென்றெளிபுனலலங்கற்
கெந்தியாவுகளுங்கெண்டைபுண்டரிகங்
கிழிக்குந்தண்பணைசெய்கீழ்க்கோட்டூர்
வந்தநாண்மணியம்பலத்துணின்றாடு
மைந்தனேயறியுமென்மனமே. (க0)

111 இத்திநின்றாடுமரிவையர்தெருவிற்
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
மத்தனைமணியம்பலத்துணின்றாடு
மைந்தனையாரணம்பிதற்றும்
பித்தனேன்மொழிந்தமணிநெடுமாலை
பெரியவர்க்ககலிருவிசும்பின்
முத்தியாமென்றேயுலகரேத்துவரேன்
முகமலர்ந்தெதிர்கொளுந்திருவே. (கக)

திருச்சிற்றம்பலம்

---

## ௯. திருமுகத்தலை

பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

112 புவனநாயகனேயகவுயிர்க்கமுதே
பூரணாவாரணம்பொழியும்
பவளவாய்மணியேபணிசெய்வார்க்கிரங்கும்
பசுபதீபன்னகாபரணா
அவனிஞாயிறுபோன்றருள்புரிந்தடியே
னகத்திலுமுகத்தலைமூதூர்த்
தவளமாமணிப்பூங்கோயிலுமமர்ந்தாய்
தனியனேன்றனிமைநீங்குதற்கே. (க)

113 புழுங்குதீவினையேன்வினைகெடப்புகுந்து
புணர்பொருளுணர்வுநூல்வகையால்
வழங்குதேன்பொழியும்பவளவாய்முக்கண்
வளரொளிமணிநெடுங்குன்றே
முழங்குதீம்புனல்பாய்ந்திளவராலுகளு
முகத்தலையகத்தமர்ந்தடியேன்
விழுங்குதீங்கனியாயினியவானந்த
வெள்ளமாயுள்ளமாயினையே. (உ)

114 கன்னகாவுள்ளக்கள்வனேனின்கட்
கசிவிலேன்கண்ணினீர்சொரியேன்
முன்னகாவொழியேனாயினுஞ்செழுநீர்
முகத்தலையகத்தமர்ந்துறையும்
பன்னகாபரணாபவளவாய்மணியே
பாவியேனாவியுள்புகுந்த
தென்னகாரணநீயேழைநாயடியேற்
கெளிமையோபெருமையாவதுவே. (௩)

115 கேடிலாமெய்ந்நூல்கெழுமியுஞ்செழுநீர்க்
கிடையனாருடையவென்னெஞ்சிற்
பாடிலாமணியேமணியுமிழ்ந்தொளிரும்
பரமனேபன்னகாபரணா
மேடெலாஞ்செந்நெற்பசுங்கதிர்விளைந்து
மிகத்திகழ்முகத்தலைமூதூர்
நீடினாயெனினுமுள்புகுந்தடியே
னெஞ்செலாநிறைந்துநின்றாயே. (௪)

116 அக்கனாவனையசெல்வமேசிந்தித்
தைவரோடென்னொடும்விளைந்த
இக்கலாமுழுதுமொழியவந்துள்புக்
கென்னையாளாண்டநாயகனே
முக்கணாயகனேமுழுதுலகிறைஞ்ச
முகத்தலையகத்தமர்ந்தடியேன்
பக்கலானந்தமிடையறாவண்ணம்
பண்ணினாய்பவளவாய்மொழிந்தே. (௫)

117 புனல்படவுருகிமண்டழல்வெதும்பிப்
பூம்புனல்பொதிந்துயிரளிக்கும்
வினைபடுநிறைபோனிறைந்தவேதகத்தென்
மனநெகமகிழ்ந்தபேரொளியே
முனைபடுமதின்மூன்றெரித்தநாயகனே
முகத்தலையகத்தமர்ந்தடியேன்
வினைபடுமுடனீபுகுந்துநின்றமையால்
விழுமியவிமானமாயினதே. (௬)

118 விரியுநீராலக்கருமையுஞ்சாந்தின்
வெண்மையுஞ்செந்நிறத்தொளியும்
கரியுநீறுடுங்கனலுமொத்தொளிருங்
கழுத்திலோர்தனிவடங்கட்டி
முரியுமாறெல்லாமுரிந்தழகியையாய்
முகத்தலையகத்தமர்ந்தாயைப்
பிரியுமாறுளதேபேய்களோஞ்சிசெய்த
பிழைபொறுத்தாண்டபேரொளியே. (௭)

119 என்னையுன்பாதபங்கயம்பணிவித்
தென்பெலாமுருகநீயெளிவந்
தென்னையென்பால்வைத்தெங்குமெஞ்ஞான்று
மொழிவறநிறைந்தவொண்சுடரே
முன்னையென்பாசமுழுவதுமகல
முகத்தலையகத்தமர்ந்தெனக்கே
கன்னலும்பாலுந்தேனுமாரமுதுங்
கனியுமாயினியையாயினையே. (அ)

120 அம்பராவனலாவனிலமேபுவிநீ
யம்புவேயிந்துவேயிரவி
உம்பராலொன்றுமறியொணுவணுவா
யொழிவறநிறைந்தவொண்சுடரே
மொய்ம்பராய்நலஞ்சொன்மூதறிவாளர்
முகத்தலையகத்தமர்ந்தெனக்கே
எம்பிரானாகியாண்டநீமீண்டே
யெந்தையுந்தாயுமாயினையே. (கூ)

121 மூலமாய்முடிவாய்முடிவிலாமுதலாய்
முகத்தலையகத்தமர்ந்தினிய
பாலுமாயமுதாம்பன்னகாபரணன்
பனிமலர்த்திருவடியிணைமேல்
ஆலையம்பாகினனையசொற்கருவூ
ரமுதுறழ்தீந்தமிழ்மாலை
சீலமாப்பாடமடியவரெல்லாஞ்
சிவபதங்குறுகிநின்றாரே. (கo)

திருச்சிற்றம்பலம்

---

## ரு. திரைலோக்கியசுந்தரம்

### பண்-காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

122 நீரோங்கிவளர்கமலநீர்பொருந்தாத்தன்மையன்றே
யாரோங்கிமுகமலர்ந்தாங்கருவினையேன்றிறமறந்தின்
றூரோங்கும்பழிபாராதுன்பாலேவிழுந்தொழிந்தேன்
சீரோங்கும்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (க)

123 நையாதமனத்தினனைநைவிப்பானித்தெருவே
ஐயாநீயுலாப்போந்தவன்றுமுதலின்றுவரை
கையாரத்தொழுதருவிகண்ணாரச்சொரிந்தாலும்
செய்யாயோவருள்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (உ)

124 அம்பளிங்குபகலோன்பாலடைபற்றாயிவண்மனத்தின்
முன்பளிந்தகாதலுநின்முகந்தோன்றவிளங்கிற்றால்
வம்பளிந்தகனியேயென்மருந்தேநல்வளர்முக்கட்
செம்பளிங்கேபொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௩)

125 மைஞ்ஞின்றகுழலாடன்மனந்தரவும்வளைதாரா
திஞ்ஞின்றகோவணவனிவன்செய்ததியார்செய்தார்
மெய்ஞ்ஞின்றதமர்க்கெல்லாமெய்ஞ்ஞிற்கும்பண்பினாற்
செய்ஞ்ஞுன்றியிலன்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௪)

126 நீவாராதொழிந்தாலுநின்பாலேவிழுந்தேழை
கோவாதமணிமுத்தங்குவளைமலர்சொரிந்தனவால்
ஆவாவென்றருள்புரியாயமரர்கணந்தொழுதேத்தும்
தேவாதென்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௫)

127 முழுவதுநீயாயினுமிம்மொய்குழலாண்மெய்ம்முழுதும்
பழுதெனவேநினைந்தோராள்பயில்வதுநின்னொருநாமம்
அழுவதுநின்றிறநினைந்தேயதுவன்றோபெறும்பேறு
செழுமதில்சூழ்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௬)

128 தன்சோதியெழுமேனித்தபனியப்பூஞ்சாய்க்காட்டாய்
உன்சோதியெழில்காண்பானோவிடவுமுருக்காட்டாய்
துஞ்சாகண்ணிவளுடையதுயர்தீருமாறுரையாய்
செஞ்சாலிவயற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௭)

129 அரும்பேதைக்கருள்புரியாதொழிந்தாய்நின்னவிர்சடைமேல்
நிரம்பாதபிறைதூவுநெருப்பொடுநின்கையிலியாழ்
நரம்பாலுமுயிரீர்ந்தாய்நளிர்புரிசைக்குளிர்வனம்பா
திரம்போதுசொரிகோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௮)

130 ஆறாதபேரன்பினவருள்ளங்குடிகொண்டு
வேறாகப்பலர்சூழவீற்றிருத்தியதுகொண்டு
வீறாடியிவளுன்னைப்பொதுநீப்பான்விரைந்தின்னம்
தேறாடென்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௯)

131 சரிந்ததுகிறளர்ந்தவிடையவிழ்ந்தகுழலிளந்தெரிவை
இருந்தபரிசொருநாள்கண்டிரங்காயெம்பெருமானே
முரிந்தநடைமடந்தையர்தம்முழங்கொலியும்வழங்கொலியும்
திருந்துவிழவணிகோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௧௦)

132 ஆரணத்தேன்பருகியருந்தமிழ்மாலைபகரவரும்
காரணத்தினிலைபெற்றகருவூரன்றமிழ்மாலை
பூரணத்தாலீரைந்தும்போற்றிசைப்பார்காந்தாரம்
சீரணைத்தபொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

# ௬. கங்கைகொண்டசோளேச்சரம்

பண்-பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்**

133 அன்னமாய்விசும்புபறந்தயன்றேட
வங்ஙனேபெரியநீசிறிய
என்னையாள்விரும்பியென்மனம்புகுந்த
வெளிமையையென்றுநான்மறக்கேன்
முன்னமாலறியாவொருவனு*மிருவா
முக்கணுநாற்பெருந்தடந்தோட்
கன்னலேதேனேயமுதமேகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (க)

134 உண்ணெகிழ்ந்துடலநெக்குமுக்கணு
வோலமென்றோலமிட்டொருநாள்
மண்ணினின்றலறேன்வழிமொழிமாலை
மழலையஞ்சிலம்படிமுடிமேற்
பண்ணிநின்றுருகேன்பணிசெயேனெனினும்
பாவியேனுவியுள்புகுந்தென்
கண்ணினின்றகலானென்கொலோகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (உ)

135 அற்புதத்தெய்வமிதனின்மற்றுண்டோ
வன்பொடுதன்னையஞ்செழுத்தின்
சொற்பதத்துள்வைத்துள்ளமள்ளூறுந்
தொண்டருக்கெண்டிசைக்கனகம்
பற்பதக்குவையும்பைம்பொன்மாளிகையும்
பவளவாயவர்பணைமுலையும்
கற்பகப்பொழிலுமுழுதமாங்கங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௩)

136 ஐயபொட்டிட்டவளகவாணுதலு
மழகியவிழியும்வெண்ணீறும்
சைவம்விட்டிட்டசடைகளுஞ்சடைமேற்
றரங்கமுஞ்சதங்கையுஞ்சிலம்பும்
மொய்கொளெண்டிக்குங்கண்டநின்றொண்டர்
முகமலர்ந்திருகணீரரும்பக்
கைகண்மொட்டிக்குமென்கொலோகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௪)

---

(பி - ம்.) * மருவா

137 சுருதிவானவனுந் திருநெடுமாலாஞ்
சுந்தரவிசும்பினிந்திரனும்
பருதிவானவனும்படர்சடைமுக்கட்
பகவனுமகவுயிர்க்கழுதாம்
எருதுவாகனனுமெயில்கண்மூன்றெரித்த
வேறுசேவகனுமாம்பின்னும்
கருதுவார்கருதுமுருவமாங்கங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௫)

138 அண்டமோரணுவாம்பெருமைகொண்டணுவோ
ரண்டமாஞ்சிறுமைகொண்டடியேன்
உண்டவூணுனக்காம்வகையெனதுள்ள
முள்கலந்தெழுபராஞ்சோதி
கொண்டநாண்பாம்பாம்பெருவரைவில்லிற்
குறுகலர்புரங்கண்மூன்றெரித்த
கண்டனேநீலகண்டனேகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௬)

139 மோதலைப்பட்டகடல்வயிறுதித்த
முழுமணித்தரளமதாங்கே
காய்தலைப்பட்டங்குருகியொன்றாய
தன்மையிலென்னைமுன்னின்ற
நீதலைப்பட்டாலியானுமவ்வகையே
நிசிசரரிருவரோடொருவர்
காதலிற்பட்டகருணையாய்கங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௭)

140 தத்தையங்கனையார்தங்கண்மேல்வைத்த
தயாவைநூறாயிரங்கூறிட்
டத்திலங்கொரு கூ*றுன்கண்வைத்தவருக்
கமருலகளிக்குநின்பெருமை
பித்தனென்றொருகாற்பேசுவரேனும்
பிழைத்தவைபொறுத்தருள்செய்யும்
கைத்தலஞ்சென்னிமேல்வைத்தகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௮)

141 பண்ணியதழல்காய்பாலளாநீர்போற்
பாவமுன்பறைந்துபாலனைய
புண்ணியம்பின்சென்றறிவினுக்கறியப்
புகுந்ததோர்யோகினிற்பொலிந்து

---

(பி - ம்.) * றுன்றன்மேல்வைக்கிலமருல

நுண்ணியையெனினுநம்பநின்பெருமை
நுன்னிடையொடுங்கநீவந்தென்
கண்ணினுண்மணியிற்கலந்தனைகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (கூ)

142 அங்கைகொண்டமரர்மலர்மழைபொழிய
வடிச்சிலம்பலம்பவந்தொருநாள்
உங்கைகொண்டடியேன்சென்னிவைத்தென்னை
யுய்யக்கொண்டருளினைமருங்கிற்
கொங்கைகொண்டனுங்குங்கொடியிடைகாணிற்
கொடியளென்றவிர்சடைமுடிமேற்
கங்கைகொண்டிருந்தகடவுளேகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (கய)

143 மங்கையோடிருந்தேயோகுசெய்வானை
வளரிளந்திங்களைமுடிமேற்
கங்கையோடணியுங்கடவுளைக்கங்கை
கொண்டசோளேச்சரத்தானை
அங்கையோடேந்திப்பலிதிரிகருவூ
ரறைந்தசொன்மாலையாலழிச்
செங்கையோடுலகிலரசுவீற்றிருந்து
திளைப்பதுஞ்சிவனருட்கடலே. (கக)

திருச்சிற்றம்பலம்

---

## எ. திருப்பூவணம்

### பண் - பஞ்சமம்

### திருச்சிற்றம்பலம்

144 திருவருள்புரிந்தாளாண்டுகொண்டிங்ஙன்
சிறியனுக்கினியதுகாட்டிப்
பெரிதருள்புரிந்தானந்தமேதருநின்
பெருமையிற்பெரியதொன்றுளதே
மருதாசிருங்கோங்ககின்மரஞ்சாடி
வரைவளங்கவர்ந்திழிவையைப்
பொருதிரைமருங்கோங்காவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (க)

145 பாம்பணைத்துயின்றோனயன்முதற்றேவர்
பன்னெடுங்காலநிற்காண்பான்
ஏம்பலித்திருக்கவென்னுளம்புகுந்த
வெளிமையையென்றுநான்மறக்கேன்

தேம்புனற்பொய்கைவாளைவாய்மடுப்பத்
தெளிதருதேறல்*பாய்ந்தொழுகும்
பூம்பணைச்சோலையாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௨)

146 கரைகடலொலியிற்றமருகத்தரையிற்
கையினிற்கட்டியகயிற்றால்
இருதலையொருநாவியங்கவந்தொருநா
ளிருந்திடாயெங்கள்கண்முகப்பே
விரிதிகழ்விழவின்பின்செல்வோர்பாடல்
வேட்கையின்வீழ்ந்தபாதவிழ்ந்த
புரிசடைதுகுக்குமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௩)

147 கண்ணியன்மணியின்சூழல்புக்கங்கே
கலந்துபுக்கொடுங்கினேற்கங்ஙன்
நுண்ணியையெனினும்நம்பநின்பெருமை
நுண்ணிமையிறந்தமையறிவன்
மண்ணியன்மரபிற்றங்கிருண்மொழுப்பின்
வண்டினம்பாடநின்றாடும்
புண்ணியமகளிராவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௪)

148 கடுவினைப்பாசக்கடல்கடந்தைவர்
கள்ளரைமெள்ளவேதுரந்துன்
அடியிணையிரண்டுமடையுமாறடைந்தே
னருள்செய்வாயருள்செயாதொழிவாய்
நெடுநிலைமாடத்திரவிருள்கிழிக்க
நிலைவிளக்கலகில்சாலேகப
புடைகிடந்திலங்குமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௫)

149 செம்மனக்கிழவோரன்புதாவென்றுன்
சேவடிபார்த்திருந்தலச
எம்மனங்குடிகொண்டிருப்பதற்கியானா
ரென்னுடையடிமைதானியாதே
அம்மனங்குளிர்நாட்பலிக்கெழுந்தருள
வரிவையரவிழ்குழற்சுரும்பு
பொம்மெனமுரலுமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௬)

(பி - ம்) * பேர்ந்தொ

150 சொன்னவின்முறைநான்காரணமுணராச்
சூழல்புக்கொளித்தநீயின்று
கன்னவின்மனத்தென்கண்வலைப்படுமிக்
கருணையிற்பெரியதொன்றுளதே
மின்னவில்கனகமாளிகைவாய்தல்
விளங்கிளம்பிறைதவழ்மாடம்
பொன்னவில்புரிசையாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௭,௮,௯)

151 பூவணங்கோயில்கொண்டெனையாண்ட
புனிதனைவனிதைபாகனைவெண்
கோவணங்கொண்டுவெண்டலையேந்துங்
குழகனையழகெலாநிறைந்த
தீவணன்றன்னைச்செழுமறைதெரியுந்
திகழ்கருவூரனேனுரைத்த
பாவணத்தமிழ்கள்பத்தும்வல்லார்கள்
பரமனதுருவமாகுவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

## அ. திருச்சாட்டியக்குடி

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

152 பெரியவாகருணையிளநிலாவெறிக்கும்பிறைதவழ்சடைமொழுப்பவிழ்ந்து, சரியுமாசுழியங்குழைமிளிர்ந்திருபாற்றூழ்ந்தவாகாதுகள்கண்டம், கரியவாதாமுஞ்செய்யவாய்முறுவல்காட்டுமோசாட்டியக்குடியார், இருகைகூம்பினகண்டலர்ந்தவாமுகமேழிருக்கையிலிருந்தவீசனுக்கே. (௧)

153 பாந்தள்பூணாரம்பரிகலங்கபாலம்பட்டவர்த்தனமெருதன்பர்வார்ந்தகண்ணருவிமஞ்சனசாலைமலைமகண்மகிழ்பெருந்தேவிசாந்தமுந்திருநீறருமறைகீதஞ்சடைமுடிசாட்டியக்குடியார், ஏந்தெழிலிதயங்கோயின்மாளிகையேழிருக்கையுளிருந்தவீசனுக்கே.

154 தொழுதுபின்செல்வதயன்முதற்கூட்டந்தொடர்வனமறைகளான்கெனினும், கழுதுறுகரிகாடுறைவிடம்போர்வைகவந்திகைகரியுரிதிரிந்தூண், தழலுமிழரவங்கோவணம்பளிங்குசெபவடஞ்சாட்டியக்குடியார், இழுதுநெய்சொரிந்தோம்பழலொளிவிளக்கேழிருக்கையிலிருந்தவீசனுக்கே. (௩)

155 பதிகநான்மறைதும்புருவுநாரதரும்பரிவொடுபாடுகொந்தர்ப்பர், கதியெலாமரங்கம்பிணையன் மூவுலகிற்கடியிருட்டிருநடம்புரியும்,சதியிலார்கதியிலொலிசெயுங்கையிற்றமருகஞ்சாட்டியக்குடியார், இதயமாங்கமலங்கமலவர்த்தனையேழிருக்கையிலிருந்தவீசனுக்கே. (ரு)

156 திருமகன்முருகன்றேவியேலுமையாடிருமகண்மருமகன்றாயாம், மருமகன்மதனன்மாமனேலிமவான்மலையுடையரையர்தம்பாவை, தருமலிவளஞ்சிவபுரன்றோழன்றனபதிசாட்டியக்குடியார், இருமுகங்கழன்மூன்றேழுகைத்தலமேழிருக்கையிலிருந்தவீசனுக்கே.

157 அனலமேபுனலேயனிலமேபுவனியம்பராவம்பரத்தளிக்கும், கனகமேவெள்ளிக்குன்றமேயென்றன்களைகணேகளைகண்மற்றில்லாத், தனியனேனுள்ளங்கோயில்கொண்டருளுஞ்சைவனேசாட்டியக்குடியார்க், கினியதீங்கனியாயொழிவறநிறைந்தேழிருக்கையிலிருந்தவாறியம்பே. (சா)

158 செம்பொனேபவளக்குன்றமேநின்றதிசைமுகன்மான்முதற்கூட்டத், தன்பரானவர்கள்பருகுமாரமுதேயத்தனேபித்தனேனுடைய,சம்புவேயணுவேதாணுவேசிவனேசங்கராசாட்டியக்குடியார்க், கின்பனேயெங்குமொழிவறநிறைந்தேழிருக்கையிலிருந்தவாறியம்பே. (எ)

159 செங்கணாபோற்றிதிசைமுகாபோற்றிசிவபுரநகருள்வீற்றிருந்த, அங்கணாபோற்றியமரனேபோற்றியமரர்கடலைவனேபோற்றி, தங்கணான்மறைநூல்சகலமுங்கற்றோர்சாட்டியக்குடியிருந்தருளும், எங்கணாயகனேபோற்றியேழிருக்கையிறைவனேபோற்றியேபோற்றி. (அ)

160 சித்தனேயருளாய்செங்கணாவருளாய்சிவபுரநகருள்வீற்றிருந்த, அத்தனேயருளாயமரனேயருளாயமரர்களதிபனேயருளாய், தத்துநீர்ப்படுகர்த்தண்டலைச்சூழற்சாட்டியக்குடியுளேழிருக்கை, முத்தனேயருளாய்முதல்வனேயருளாய்முன்னவாதுயர்கெடுத்தெனக்கே. (கூ)

161 தாட்டரும்பழனப்பைம்பொழிற்படுகர்த்தண்டலைச்சாட்டியக்குடியார், ஈட்டியபொருளாயிருக்குமேழிருக்கையிருந்தவன்றிருவடிமலர்மேற், காட்டியபொருட்கலைபயில்கருவூரன்கழறுசொன்மாலையீரைந்தும், மாட்டியசிந்தைமைந்தருக்கன்றேவளரொளிவிளங்குவானுலகே. (க0)

திருச்சிற்றம்பலம்

## ௯. தஞ்சையிராசராசேச்சரம்

பண் - பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்**

162 உலகெலாந்தொழவந்தெழுகதிர்ப்பருதி
யொன்றுநூறாயிரகோடி
அலகெலாம்பொதிந்ததிருவுடம்பச்சோ
வங்ஙனேயழகிதோவரணம்
பலகுலாம்படைசெய்நெடுநிலைமாடம்
பருவரைஞாங்கர்வெண்டிங்கள்
இலைகுலாம்பதணத்திஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௧)

163 நெற்றியிற்கண்ணென்கண்ணினின்றகலா
நெஞ்சினிலஞ்சிலம்பலைக்கும்
பொற்றிருவடியென்குடிமுழுதாளப்
புகுந்தனபோந்தனவில்லை
மற்றெனக்குறவென்மறிதிரைவடவாற்
றிடுபுனன்மதகில்வாழ்முதலை
எற்றுநீர்க்கிடங்கிலிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௨)

164 சடைகெழுமகுடந்தண்ணிலாவிரிய
வெண்ணிலாவிரிதருதரளக்
குடைநிழல்விடைமேற்கொண்டுலாப்போதுங்
குறிப்பெனேகோங்கிணரனைய
குடைகெழுநிருபர்முடியொடுமுடிதேய்ந்
தக்கசெஞ்சுடர்ப்படுகுவையோங்
கிடைகழிமாடத்திஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௩)

165 வாழியம்போதத்தருகுபாய்விடையம்
வரிசையின்விளக்கலினடுத்த
சூழலம்பளிங்கின்பாசலராதிச்
சுடர்விடுமண்டலம்பொலியக்
காழகில்கமழுமாளிகைமகளிர்
கங்குல்வாயங்குலிகெழும
யாழொலிசிலம்புமிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௪)

166 எவருமாமறைகளைவையும்வானவர்க
ளீட்டமுந்தாட்டிருக்கமலத்
தவருமாலவனுமறிவரும்பெருமை
யடலழலுமிழ்தழற்பிழம்பர்
உவரிமாகடலினொலிசெய்மாமறுகி
லுறுகளிற்றரசினதீட்டம்
இவருமால்வரைசெயிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௫)

167 அருளுமாறருளியாளுமாறுள
வடிகடமழகியவிழியும்
குருளும்வார்காதுங்காட்டியான்பெற்ற
குயிலினைமயல்செய்வதழகோ
தரளவான்குன்றிற்றண்ணிலாவொளியுந்
தருகுவால்பெருகுவான்றெருவில்
இருளெலாங்கிழியுமிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௬)

168 தனிப்பெருந்தாமேமுழுதுறப்பிறப்பின்
றளிரிறப்பிலையுதிர்வென்றால்
நினைப்பருந்தம்பாற்சேறலின்றேனு
நெஞ்சிடிந்துருகுவதென்னே
சுனைப்பெருங்கலங்கற்பொய்கையங்கழுநீர்ச்
சூழன்மாளிகைசுடர்வீசும்
எனைப்பெருமணஞ்செயிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௭)

169 பன்னெடுங்காலம்பணிசெய்துபழையோர்
தாம்பலரேம்பலித்திருக்க
என்னெடுங்கோயினெஞ்சுவீற்றிருந்த
வெளிமையையென்றுநான்மறக்கேன்
மின்னெடும்புருவத்திளமயிலனையார்
விலங்கல்செய்நாடகசாலை
இன்னடம்பயிலுமிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௮)

170 மங்குல்சூழ்போதினொழிவறநிறைந்து
வஞ்சகர்நெஞ்சகத்தொளிப்பார்
அங்கழற்சுடராமவர்க்கிளவேன
லலர்கதிரனையர்வாழியரோ
பொங்கெழிற்றிருநீறழிபொசிவனப்பிற்
புனறுளும்பவிர்சடைமொழுப்பர்
எங்களுக்கினியரிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௯)

171 தனியரெத்தனையோராயிரவருமாந்
தன்மையரென்வயத்தினராம்
கனியரத்தருதீங்கரும்பர்வெண்புரிநூற்
கட்டியரட்டவாரமிர்தர்
புனிதர்பொற்கழலர்புரிசடாமகுடர்
புண்ணியர்பொய்யிலாமெய்யர்க்
கினியரெத்தனையுமிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (கO)

172 சரளமந்தாரசண்பகவகுள
சந்தனநந்தனவனத்தின்
இருள்விரிமொழுப்பினிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவரை
அருமருந்தருந்தியல்லறீர்கருவூ
ரறைந்தசொன்மாலையீரைந்தின்
பொருண்மருந்துடையோர்சிவபதமென்னும்
பொன்னெடுங்குன்றுடையோரே. (கக)

திருச்சிற்றம்பலம்

---

# கO. திருவிடைமருதூர்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

173 வெய்யசெஞ்சோதிமண்டலம் பொலியவீங்கிருணடு நல்யாமத்தோர், மையசெம்பாந்தள் பருமணியுமிழ்ந்து பாவியேன் காதல்செய்காதில், ஐயசெம்பொற்றோட்ட விர்சடைமொழுப்பினழிவழகிய திருநீற்று, மையசெங்கண்டத்தண்டவானவர்கோன்மருவிடந்திருவிடைமருதே. (க)

174 இந்திரலோகமுழுவதும்பணிகேட்டிணையடிதொழுதெழத்தாம்போய், ஐந்தலைநாகமேகலையரையாவகந்தொறம்பலிதிரியடிகள், தந்திரிவீணைகீதமும்பாடச்சாதிகின்னரங்கலந்தொலிப்ப, மந்திரகீதந்தீங்குழலெங்குமருவிடந்திருவிடைமருதே. (உ)

175 பனிபடுமதியம்பயில்கொழுந்தன்னபல்லவமவல்லியென்றிங்ஙன், வினைபடுகனகம்போலயாவையுமாய்வீங்குலகொழிவறநிறைந்து, தனிபடுகலவிமலைமகளுடனாய்த்தூங்கிருணடுநல்யாமத்தென், மனனிடையணுகிநுணுகியுள்கலந்தோன்மருவிடந்திருவிடைமருதே. (௩)

176 அணியுமிழ்சோதிமணியினுள்கலந் தாங்கடியனே னுள்கலந் தடி
யேன், பணிமகிழ்ந் தருளுமரிவைபாகத்தன்படர்சடைவிடமிடற்
றடிகள், துணியுமிழாடையரையிலோராடைசுடருமிழ் தரவதன
ருகே, மணியுமிழ்நாகமணியுமிழ்ந் திமைப்பமருவிடந் திருவிடைம
ருதே. (௪)

177 பந்தமும்பிரிவுந்தெரிபொருட்பனுவற்படிவழிசென் றுசென்றே
றிச், சிந்தையுந் தானுங்கலந் ததோர்கலவிதெரியினுந்தெரிவுருவ
வண்ணம், எந்தையுந் தாயும்யானுமென் றிங்ஙனெண்ணில்பல்லூ
ழிகளுடனாய், வந் தணுகாது நுணுகியுள்கலந்தோன் மருவிடந்திரு
விடைமருதே. (௫)

178 எரிதருகரிகாட்டிடுபிணநிணமுண்டேப்பமிட்டிலங்கெயிற்றழல்
வாய்த், துருகழகனடும்பேய்க்கணமெழுந் தாடுந் தூங்கிருணடுநல்
யாமத்தே, அருள்புரிமுறுவன் முகிழ்நிலாவெறிப்பவந்திபோன்
றொளிர்திருமேனி, வரியரவாடவாடுமெம்பெருமான்மருவிடந்
திருவிடைமருதே. (௬)

179 எழிலையாழ்செய்கைப்பசுங்கலன்விசும்பினின்றுளிபடநனைந்து
ருகி, அழலையாழ்புருவம்புனலொடுங்கிடந் தாங்கா தனேன்மாதரா
ர்கலவித், தொழிலையாழ்நெஞ்சமிடர்படாவண்ணந் தூங்கிருணடு
நல்யாமத்தோர், மழலையாழ்சிலம்பவந்தகம்புகுந்தோன் மருவிட
ந்திருவிடைமருதே. (௭)

180 வையவாம்பெற்றம்பெற்றமேறுடையார்மாதவர்காதல்வைத்தெ
ன்னை, வெய்யவாஞ்செந்தீப்பட்டவிட்டிகைபோல்விழுமியோன்
முன்புபின்பென்கோ, நொய்யவாறென்னவந்தள் வீற்றிருந்தநூ
றுநூறுயிரகோடி, மையவாங்கண்டத்தண்டவானவர்கோன்மரு
விடந்திருவிடைமருதே. (௮)

181 கலங்கலம்பொய்கைப்புனற்றெளிவிடத்துக்கலந்தமண்ணிடைக்
கிடந்தாங்கு, நலங்கலந்தடியேன்சிந்தையுட்புகுந்தஎம்பனேவம்
பனேனுடைய, புலங்கலந்தவனேயென்றுநின்றுருகிப்புலம்புவா
ரவம்புகாருவி, மலங்கலங்கண்ணிற்கண்மணியனையான் மருவிட
ந்திருவிடைமருதே. (௯)

182 ஒருங்கிருங்கண்ணினெண்ணில்புன்மாக்களுறங்கிருணடுநல்
யாமத்தோர், கருங்கணின்றிமைக்குஞ்செழுஞ்சுடர்விளக்கங்கல
ந்தெனக்கலந்துணர்கருவூர், தருங்கரும்பனையதீந்தமிழ்மாலைதட
ம்பொழின்மருதயாழுதிப்ப, வருங்கருங்கண்டத்தண்டவானவர்
கோன்மருவிடந்திருவிடைமருதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# * பூந்துருத்திநம்பிகாட நம்பி திருவிசைப்பா

## க. திருவாரூர்

பண் - பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்**

183 கைக்குவான்முத்தின்சரிவளைபெய்துகழுத்திலோர்தனிவடங் கட்டி, முக்கணாயகராய்ப்பவனிபோந்திங்ஙன்முரிவதோர்முரிவு மையளவும், தக்கசீர்க்கங்கையளவுமன்றென்னே தம்மொருப்பாடு லகதன்மேல், மிக்கசீராரூராதியாய்வீதிவிடங்கராய்நடங்குலாவி னரே. (க)

184 பத்தியாயுணர்வோரருளைவாய்மடுத்துப்பருகுதோறமுதமொத் தவர்க்கே, தித்தியாவிருக்குந்தேவர்காளிவர்தந்திருவுருவிருதந் வாபாரீர், சத்தியாய்ச்சிவமாயுலகெலாம்படைத்ததனிமுழுமுத லுமாயதற்கோர், வித்துமாயாரூராதியாய்வீதிவிடங்கராய்நடங் குலாவினரே. (உ)

**திருச்சிற்றம்பலம்**

---

## உ. கோயில்

பண் - சாளரபாணி

**திருச்சிற்றம்பலம்**

185 முத்துமணிவயிரமாணிக்கமாலைகண்மேற்
றொத்துமிளிர்வனபோற்றூண்டுவிளக்கேய்ப்ப
எத்திசையும்வானவர்களேத்துமெழிற்றில்லை
அத்தனுக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. (க)

186 கடியார்கணம்புல்லர்கண்ணப்பரென்றுன்
அடியாரமருலகமாளநீயாளாதே
முடியாமுத்தீவேள்விமூவாயிரவரொடும்
குடிவாழ்க்கைகொண்டுநீகுலாவிக்கூத்தாடினையே. (உ)

187 அல்லியம்பூம்பழனத்தாமூர்நாவுக்கரசைச்
செல்லநெறிவகுத்தசேவகனேதென்றில்லைக்
கொல்லைவிடையேறிகூத்தாடரங்காகச்
செல்வநிறைந்தசிற்றம்பலமேசேர்ந்தனையே. (ங)

---

(பி - ம்.) * நம்பிகாட நம்பி.

188 எம்பந்தவல்வினைநோய்தீர்த்திட்டெமையாளும்
சம்பந்தன்காழியர்கோன்றன்னையுமாட்கொண்டருளி
அம்புந்துகண்ணாளுந்தானுமணிதில்லைச்
செம்பொன்செயம்பலமேசேர்ந்திருக்கையாயிற்றே. (௪)

189 களையாவுடலோடுசேரமானாரூரன்
விளையாமதமாறுவெள்ளானைமேல்கொள்ள
முளையாமதிசூடிமூவாயிரவரொடும்
அளையாவிளையாடுமம்பலநின்றாடரங்கே. (௫)

190 அகலோகமெல்லாமடியவர்கடற்சூழப்
புகலோகமுண்டென்றுபுகுமிடநீதேடாதே
புவலோகநெறிபடைத்தபுண்ணியங்கண்ணியசீர்ச்
சிவலோகமாவதுவுந்தில்லைச்சிற்றம்பலமே. (௬)

191 களகமணிமாடஞ்சூளிகைசூழ்மாளிகைமேல்
அளகமதிநுதலாராயிழையார்போற்றிசைப்ப
ஒளிகொண்டமாமணிகளோங்கிருளையாங்கற்றும்
தெளிகொண்டதில்லைச்சிற்றம்பலமேசேர்ந்தனையே. (௭)

192 பாடகமுநூபுரமும்பல்சிலம்பும்போர்ந்தொலிப்பச்
சூடகக்கைநல்லார்தொழுதேத்தத்தொல்லுலகில்
நாடகத்தின்கூத்தைநவிற்றுமவர்நாடோறும்
ஆடகத்தான்மேய்ந்தமைந்தவம்பலநின்றாடரங்கே. (௮)

193 உருவத்தெரியுருவாயூழிதோறெத்தனையும்
பரவிக்கிடந்தயனுமாலும்பணிந்தேத்த
இரவிக்குநேராகியேய்ந்திலங்குமாளிகைசூழ்ந்
தரவிக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. (௯)

194 சேடருறைதில்லைச்சிற்றம்பலத்தான்றன்
ஆடலதிசயத்தையாங்கறிந்துபூந்துருத்திக்
காடன்றமிழ்மாலைபத்துங்கருத்தறிந்து
பாடுமிவைவல்லார்பற்றுநிலைபற்றுவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# * கண்டராதித்தர் திருவிசைப்பா

## கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

195 மின்னாருருவமேல்விளங்கவெண்கொடிமாளிகைசூழப்
பொன்னார்குன்றமொன்றுவந்துநின்றதுபோலுமென்னாத்
தென்னாவென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்துள்
என்னாரமுதையெங்கள்கோவையென்றுகொலெய்துவதே. (௧)

196 ஓவாமுத்தீயஞ்சுவேள்வியாறங்கநான்மறையோர்
ஆவேபடுப்பாரந்தணாளராகுதிவேட்டுயர்வார்
மூவாயிரவர்தங்களோடுமுன்னரங்கேறிநின்ற
கோவேயுன்றன்கூத்துக்காணக்கூடுவதென்றுகொலோ. (௨)

197 முத்தீயாளர்நான்மறையர்மூவாயிரவர்நின்னோ
டொத்தேவாழுந்தன்மையாளரோதியநான்மறையைத்
தெத்தேயென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்துள்
அத்தாவுன்றனாடல்காணவணைவதுமென்றுகொலோ. (௩)

198 மானைப்புரையுமடமென்னோக்கிமாமலையாளோடும்
ஆனஞ்சாடுஞ்சென்னிமேலோரம்புலிசூடுமரன்
தேனைப்பாலைத்தில்லைமல்குசெம்பொனினம்பலத்துக்
கோனைஞானக்கொழுந்துதன்னைக்கூடுவதென்றுகொலோ. (௪)

199 களிவானுலகிற்கங்கைநங்கைகாதலனேயருளென்
றொளிமான்முன்னேவரங்கிடக்கவுன்னடியார்க்கருளும்
தெளிவாரமுதேதில்லைமல்குசெம்பொனினம்பலத்துள்
ஒளிவான்சுடரேயுன்னைநாயேனுறுவதுமென்றுகொலோ.
(௫)

200 பாரோர்முழுதும்வந்திறைஞ்சப்பதஞ்சலிக்காட்டுகந்தான்
வாரார்முலையாண்மங்கைபங்கன்மாமறையோர்வணங்கச்
சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடுகின்ற
காரார்மிடற்றெங்கண்டனாரைக்காண்பதுமென்றுகொலோ. (௬)

201 இலையார்கதிர்வேலிலங்கைவேந்தனிருபதுதோளுமிற
மலைதானெடுத்தமற்றவற்குவாளொடுநாள்கொடுத்தான்
சிலையாற்புரமூன்றெய்தவில்லிசெம்பொனினம்பலத்துக்
கலையார்மறிபொற்கையினானைக்காண்பதுமென்றுகொலோ. (௭)

---

(பி-ம்.) * கண்டராதித்தப்பெருமான்

202 வெங்கோல்வேந் தன்றென்னா டுமீழமுங்கொண்ட திறற்
செங்கோற்சோழன் கோழிவேந் தன்செம்பியன்பொன்னணிந்த
அங்கோல்வளையார்பாடியாடுமணிதில்லையம்பலத்தன்
எங்கோனீசனெம்மிறையையென் றுகொலெய் துவதே. (அ)

203 நெடியானோடுநான்முகனும்வானவருநெருங்கி
முடியான் முடிகண்மோதியுக்கமுழுமணியின் றிரளை
அடியாரலகிறைற்றிரட்டுமணிதில்லையம்பலத்துக்
கடியார்கொன்றைமாலையானைக்காண்பதுமென் றுகொலோ. (கூ)

204 சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடி தன்னைக்
காரார்சோலைக்கோழிவேந் தன்றஞ்சையர்கோன்கலந்த
ஆராவின்சொற்கண்டராதித்தனருந்தமிழ்மாலைவல்லார்
பேராவுலகிற்பெருமையோடும்பேரின்பமெய் துவரே. (கo)

திருச்சிற்றம்பலம்

---

# வேணாட்டடிகள் திருவிசைப்பா

## கோயில்

பண்-புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

205 துச்சானசெய்திடினும்பொறுப்பரன்றேயாளுகப்பார்
கைச்சாலுஞ்சிறுகதலியிலைவேம்புங்கறிகொள்வார்
எச்சார்வுமில்லாமைநீயறிந்துமெனதுபணி
நச்சாய்காண்டிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (க)

206 தம்பானைசாயப்பற்றாரென் னுமுதுசொல்லும்
எம்போல்வார்க்கில்லாமையென்னளவேயறிந்தொழிந்தேன்
வம்பானார்பணியுகத்திவழியடியேன்றொழிலிறையும்
நம்பாய்காண்டிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (உ)

207 பொசியாதோகீழ்க்கொம்புநிறைகுளமென் றதுபோலத்
திசைநோக்கிப்பேழ்கணித்துச்சிவபெருமானோவெனினும்
இசையாயொலென்றிறத்துமெனையுடையாளுரையாடாள்
நசையானேன்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (ங)

208 ஆயாதசமயங்களவரவர்கண் முன்பென்னை
நோயோடுபிணிநலியவிருக்கின்றவதனாலே
பேயாவித்தொழும்பனைத்தம்பிரானிகழுமென்பித்தாய்
நாயேனைத்திருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (ச)

209 நின்றுநினைந்திருந்துகிடந்தெழுந்துதொழுந்தொழும்பனேன்
ஒன்றியொருகானினையாதிருந்தாலுமிருக்கவொட்டாய்
கன்றுபிரிகற்றாப்போற்கதறிவித்திவரவுநில்லாய்
நன்றிதுவோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௫)

210 படமதமுமிடவயிறுமுடையகளிறுடையபிரான்
அடியறியவுணர்த்துவதுமகத்தியனுக்கோத்தன்றே
இடுவதுபுல்லோரெருதுக்கொன்றினுக்குவையிடுதல்
நடுவிதுவோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௬)

211 மண்ணோடுவிண்ணளவுமனிதரோடுவானவர்க்கும்
கண்ணாவாய்கண்ணாகாதொழிதலுநான்மிகக்கலங்கி
அண்ணாவோவென்றண்ணாந்தலமந்துவிளித்தாலும்
நண்ணாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௭)

212 வாடாவாய்நாப்பிதற்றியுனைநினைந்துநெஞ்சுருகி
வீடாஞ்செய்குற்றேவலெற்றேமற்றிதுபொய்யிற்
கூடாமேகைவந்துகுறுகுமாறியானுன்னை
நாடாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௮)

213 வாளாமாலயன்வீழ்ந்துகாண்பரியமாண்பிதனைத்
தோளாரக்கையாரத்துணையாரத்தொழுதாலும்
ஆளோநீயுடையதுவுமடியேனுன்றாள்சேரும்
நாளேதோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௯)

214 பாவார்ந்ததமிழ்மாலைபத்தரடித்தொண்டனெடுத்
தோவாதேயழைக்கின்றானென்றருளிநன்றுமிகத்
தேவேதென்றிருத்தில்லைக்கூத்தாடிநாயடியேன்
சாவாயுநினைக்காண்டலினியுனக்குத்தடுப்பரிதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

# திருவாலியமுதனார் திருவிசைப்பா

## க. கோயில் - பாதாதிகேசம்

பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

215 மையன்மாதொருகூறன்மால்விடையேறிமான்மறியேந்தியதடங்
கையன்கார்புரையுங்கறைக்கண்டன்*கனன்மழுவன் [ங்
ஐயனாரழலாடுவானணிசீர்வயற்றில்லையம்பலத்தான்
செய்யபாதம்வந்தென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (க)

(பி - ம்.) * கனமழுவ

216 சலம்பொற்றாமரை தாழ்ந்தெழுந்த தடமுந்தடம்புனல்வாய்மலர்
அலம்பிவண்டறையுமணியார்தில்லையம்பலவன் [தழீஇ
ப்லம்பிவானவர்தானவர்புகழ்ந்தேத்தவாடுபொற்கூத்தனார்கழற்
சிலம்புகிங்கிணியென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (௨)

217 குருண்டவார்குழற்கோதைமார்குயில்போன்மிழற்றிய கோலமா
திரண்டதில்லைதன்னுட்டிருமல்குசிற்றம்பலவன் [ளிகை
மருண்டுமாமலையான்மகடொழவாடுங்கூத்தன்மணிபுரைதரு
திரண்டவான்குறங்கென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (௩)

218 போழ்ந்தியானைதன்னைப் பொருப்பன் மகளுமையச்சங்கண்ட
வன், தாழ்ந்ததண்புனல்சூழ்தடமல்குசிற்றம்பலவன், சூழ்ந்தபாய்புலி
த்தோன்மிசைத்தொடுத்தவீக்கும்பொன்னாறன்னினோடு, தாழ்ந்த
கச்சதன்றேதமியேனைத்தளர்வித்ததே. (௪)

219 பந்தபாசமெலாமறப்பசுபாசநீக்கியபன்முனிவரோ
டந்தணர்வணங்குமணியார்தில்லையம்பலவன்
செந்தழல்புரைமேனியுந்திகழுந்திருவயிறும்வயிற்றினுள்
உந்திவான்சுழியென்னுள்ளத்துள்ளிடங்கொண்டனவே. (௫)

220 குதிரைமாவொடுதேர்பலகுவிந்தீண்டுதில்லையுட்கொம்பனா
மதுரவாய்மொழியார்மகிழ்ந்தேத்துசிற்றம்பலவன் [ரொடு
அதிரவார்கழல்வீசிநின்றழகாநடம்பயில்கூத்தன்மேல்
திகழுதரபந்தனமென்னுள்ளத்துள்ளிடங்கொண்டனவே. (௬)

221 படங்கொள்பாம்பணையானொடுபிரமன்பரம்பரமாவருளென்று,
தடங்கையாற்றொழவுந்தழலாடுசிற்றம்பலவன், றடங்கைநான்குமத்
தோள்களுந்தடமார்பினிற்பூண்கண்மேற்றிசை, விடங்கொள்கண்ட
மன்றேவினையேனைமெலிவித்ததே. (௭)

222 செய்யகோடுடன்கமலமலர்சூழ்தருதில்லைமாமறையோர்கடாந்
தொழ,வையமுய்யநின்றுமகிழ்ந்தாடுசிற்றம்பலவன்
செய்யவாயின்முறுவலுந்திகழுந்திருக்காதுங்காதினின்மாத்திரை
களோ,டையதோடுமன்றேயடியேனையாட்கொண்டனவே. (௮)

223 செற்றவன்புரந்தீயெழச்சிலைகோலியாரழலூட்டினானவன்
எற்றிமாமணிகளெறிநீர்த்தில்லையம்பலவன்
மற்றைநாட்டமிரண்டொடுமலருந்திருமுகமுமுகத்தினுள்
நெற்றிநாட்டமன்றேநெஞ்சுளே* திளைக்கின்றனவே. (௯)

224 தொறுக்கள்வான்கமலமலருழக்கக்கரும்புநற்சாறுபாய்தர
மறுக்கமாய்க்கயல்கண்மடைபாய்தில்லையம்பலவன்
முறுக்குவாசிகைதன்னொடுமுகிழ்த்தவவ்வகத்திமொட்டொடுமத்
தமும், பிறைக்கொள்சென்னியன்றேபிரியாதென்னுணின்றன
[வே. (௧௦)

(பி - ம்.) * நினைக்கின்றனவே

225 தூவிநீரொடுபூவவைதொழுதேத்துகையினராகிமிக்கதோர்
ஆவியுண்ணிறுத்தியமர்ந்தூறியவன்பினராய்த் [வை
தேவர்தாந்தொழவாடியதில்லைக் கூத்தனைத்திருவாலி சொல்லி
மேவவல்லவர்கள்விடையானடிமேவுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

---

## ௨. கோயில் - பவளமால்வரை

### பண்-நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

226 பவளமால்வரையைப்பனிபடர்ந்தனையதோர்படரொளிதரு திருநீறும், குவளைமாமலர்க்கண்ணியுங்கொன்றையுந்துன்றுபொற்குழற்றிருச்சடையும், திவளமாளிகைசூழ்தருதில்லையுட்டிருநடம்புரிகின்ற, தவளவண்ணனைநினைதொறுமென்மனந்தழன்மெழுகொக்கின்றதே. (௧)

227 ஒக்கவோட்டந்தவந்தியுமதியுமலைகடலொலியோடு, நெக்குவீழ்தருநெஞ்சினைப்பாய்தலுநிறையழிந்திருப்பேனைச், செக்கர்மாளிகைசூழ்தருதில்லையுட்டிருநடம்வகையாலே, பக்கமோட்டந்தமன்மதன்மலர்க்கணைபடுந்தொறுமலந்தேனே. (௨)

228 அலந்துபோயினேனம்பலக்கூத்தனேயணிதில்லைநகராளீ, சிலந்தியையரசாள்கவென்றருள்செய்ததேவதேவீசனே, உலந்தமார்க்கண்டிக்காகியக்காலனையுயிர்செகவுதைகொண்ட, மலர்ந்தபாதங்கள்வனமுலைமேலொற்றவந்தருள்செய்யாயே. (௩)

229 அருள்செய்தாடுநல்லம்பலக்கூத்தனேயணிதில்லைநகராளீ, மருள்செய்தென்றனைவனமுலைபொன்பயப்பிப்பதுவழக்காமோ, திரளுநீண்மணிக்கங்கையைத்திருச்சடைச்சேர்த்தியச்செய்யாளுக், குருவம்பாகமுமீந்துநல்லந்தியையொண்ணுதல்வைத்தோனே. (௪)

230 வைத்தபாதங்கண்மாலவன் காண்கிலன்மலரவன்முடிதேடி, எய்த்துவந்திழிந்தின்னமுந்துதிக்கின்றனெழின்மறையவற்றாலே, செசெய்த்தலைக்கமலம்மலர்ந்தோங்கியதில்லையம்பலத்தானைப், பத்தியாற்சென்றுகண்டிடவென்மனம்பதைப்பதைப்பொழியாதே. (௫)

231 தேய்ந்துமெய்வெளுத்தகம்வளைந்தரவினையஞ்சித்தானிருந்தேயும், காய்ந்துவந்துவந்தென்றனைநலிசெய்துகதிர்நிலாவெரிதூவும், ஆய்ந்தநான்மறையந்தணர்தில்லையுளம்பலத்தரனாடல், வாய்ந்தமாமலர்ப்பாதங்கள்காண்பதோர்மனத்தினையுடையேற்கே. (௬)

232 உடையும்பாய்புலித்தோலுநல்லரவமுமுண்பதும்பலிதேர்ந்து, விடையதூர்வதுமேவிடங்கொடுவரையாகினுமென்னெஞ்சம், மடை கொள்வாளைகள்குதிகொளும்வயற்றில்லையம்பலத்தனாடும், உடைய கோவினையன்றிமற்றுரையுமுள்ளுவதறியேனே. (எ)

233 அறிவுமிக்கநன்னாணமுநிறைமையுமாசையுமிங்குள்ள, உறவும் பெற்றநற்றாயொடுதந்தையுமுடன்பிறந்தவரோடும், பிறியவிட்டுனை யடைந்தனனென்றுகொள்பெரும்பற்றப்புலியூரின், மறைகளானான்குங் கொண்டந்தணரேத்தநன்மாநடமகிழ்வானை. (அ)

234 வானநாடுடைமைந்தனேயோவென்பன்வந்தருளாயென்பன்
பானெயைந்துடனாடியபடர்சடைப்பால்வண்ணனேயென்பன்
தேனமர்பொழில்சூழ்தருதில்லையுட்டிருநடம்புரிகின்ற
ஏனமாமணிப்*பூணணிமார்பனேயெனக்கருள்புரியாயே. (௯)

235 புரியும்பொன்மதில்சூழ்தருதில்லையுட்பூசுரர்பலர்போற்ற
எரியதாடுமெம்மீசனைக்காதலித்திளையவண்மொழியாக
வரைசெய்மாமதின்மயிலையர்மன்னவன்மறைவலதிருவாலி
பாவல்பத்திவைவல்லவர்பரமன†தடியிணைபணிவாரே. (௰)

திருச்சிற்றம்பலம்

---

## ௩. கோயில்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

236 அல்லாய்ப்பகலாயருவாயுருவாயாராவமுதமாய்க்
கல்லானிழலாய்கயிலைமலையாய்காணவருளென்று
பல்லாயிரம்பேர்பதஞ்சலிகள்பரவவெளிப்பட்டுச்
செல்வாய்மதிற்றில்லைக்கருளித்தேவனாடுமே. (௧)

237 அன்னநடையாரமுதமொழியாரவர்கள்பயிறில்லைத்
தென்னன்றமிழுமிசையுங்கலந்தசிற்றம்பலந்தன்னுட்
பொன்னுமணியுநிரந்ததலத்துப்புலித்தோல்பியற்கிட்டு
மின்னினிடையாளுமையாள்காணவிகிர்தனாடும்மே. (௨)

238 இளமென்முலையாரெழின்மைந்தரொடுமேராரமளிமேல்
திளையுமாடத்திருவார்தில்லைச்சிற்றம்பலந்தன்னுள்
வளர்பொன்மலையுள்வயிரமலைபோல்வலக்கைகவித்துநின்
றளவில்பெருமையமரர்போற்றவழகனாடுமே. (௩)

---

(பி - ம்.) * பூணெழின் † தடிநிழல்

239 சந்தமகிலுந்தழைப்பீலிகளுஞ்சாதிபலவுங்கொண்
டுந்தியிழியுநிவவின்கரைமேலுயர்ந்தமதிற்றில்லைச்
சிந்திப்பரியதெய்வப்பதியுட்சிற்றம்பலந்தன்னுள்
நந்திமுழவங்கொட்டநட்டநாதனாடுமே. (௪)

240 ஓமப்புகையுமகிலின்புகையுமுயர்ந்துமுகிறோயத்
தீமெய்த்தொழிலார்மறையோர்மல்குசிற்றம்பலந்தன்னுள்
வாமத்தெழிலாரெடுத்தபாதமழலைச்சிலம்பார்க்கத்
தீமெய்ச்சண்டைமேற்றிங்கள்சூடித்தேவனாடுமே. (௫)

241 குரவங்கோங்கங்குளிர்புன்னைகைதைகுவிந்தகரைகண்மேல்
திரைவந்துலவுந்தில்லைமல்குசிற்றம்பலந்தன்னுள்
வரைபோன்மலிந்தமணிமண்டபத்துமறையோர்மகிழ்ந்தேத்த
அரவமாடவனல்கையேந்தியழகனாடுமே. (௬)

242 சித்தர்தேவரியக்கர்முனிவர்தேனார்பொழிற்றில்லை
அத்தாவருளாயணியம்பலவாவென்றென்றவரேத்த
முத்துமணியுநிரந்ததலத்துண்முளைவெண்மதிசூடிக்
கொத்தார்சடைகடாழநட்டங்குழகனாடுமே. (௭)

243 அதித்தவரக்கனெரியவிரலாலடர்த்தாயருளென்று
துதித்துமறையோர்வணங்குந்தில்லைச்சிற்றம்பலந்தன்னுள்
உதித்தபோழ்திலிரவிக்கதிர்போலொளிர்மாமணியெங்கும்
பதித்ததலத்துப்பவளமேனிப்பரமனாடுமே. (௮)

244 மாலோடயனுமமரர்பதியும்வந்துவணங்கிநின்
றாலகண்டாவரனேயருளாயென்றென்றவரேத்தச்
சேலாடும்வயற்றில்லைமல்குசிற்றம்பலந்தன்னுள்
பாலாடுமுடிச்சடைகடாழப்பரமனாடுமே. (௯)

245 நெடியசமணுமறைசாக்கியருநிரம்பாப்பல்கோடிச்
செடியுந்தவத்தோரடையாத்தில்லைச்சிற்றம்பலந்தன்னுள்
அடிகளவரையாரூர்நம்பியவர்களிசைபாடக்
கொடியும்விடையுமுடையகோலக்குழகனாடுமே. (௧௦)

246 வானோர்பணியமண்ணோரேத்தமன்னிநடமாடும்
தேனார்பொழில்சூழ்தில்லைமல்குசிற்றம்பலத்தானைத்
தூநான்மறையானமுதவாலிசொன்னதமிழ்மாலைப்
பானேர்பாடல்பத்தும்பாடப்பாவநாசமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

## ௪. கோயில்

பண் - பஞ்சமம்

### திருச்சிற்றம்பலம்

247 கோலமலர்நெடுங்கட்கொவ்வைவாய்க்கொடியேரிடையீர்
பாலினையின்னமுதைப்பரமாயபரஞ்சுடரைச்
சேலுகளும்வயல்சூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தேலவுடையெம்மிறையையென்றுகொல்காண்பதுவே. (௧)

248 காண்பதியானென்றுகொல்கதிர்மாமணியைக்கனலை
ஆண்பெண்ணருவுருவென்றறிதற்கரிதாயவனைச்
சேண்பணைமாளிகைசூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலம்
மாண்புடைமாநடஞ்செய்மறையோன்மலர்ப்பாதங்களே. (௨)

249 கள்ளவிழ்தாமரைமேற்கண்டயனொடுமால்பணிய
ஒள்ளொளியின்னடுவேயுருவாய்ப்பரந்தோங்கியசீர்த்
தெள்ளியதண்பொழில்சூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
துள்ளொளியாடுகின்றவொருவனையுணர்வரிதே. (௩)

250 அரிவையோர்கூறுகந்தானழகன்னெழில்மால்கரியின்
உரிவைநல்லுத்தரியமுகந்தானும்பரார்தம்பிரான்
புரிபவர்க்கின்னருள்செய்புலியூர்த்திருச்சிற்றம்பலத்
தெரிமகிழ்ந்தாடுகின்றவெம்பிரானென்னிறையவனே. (௪)

251 இறைவனையென்கதியையென்னுளேயுயிர்ப்பாகிநின்ற
மறைவனைமண்ணும்விண்ணுமலிவான்சுடராய்மலிந்த
சிறையணிவண்டறையுந்தில்லைமாநகர்ச்சிற்றம்பல
நிறையணியாமிறையைநினைத்தேனினிப்போக்குவனே. (௫)

252 நினைத்தேனினிப்போக்குவனோநிமலத்திரளைநினைப்பார்
மனத்தினுளேயிருந்தமணியைமணிமாணிக்கத்தைக்
கனைத்திழியுங்கழனிக்கனகங்கதிரொண்பவளம்
சினத்தொடுவந்தெறியுந்தில்லைமாநகர்க்கூத்தனையே. (௬)

253 கூத்தனைவானவர்தங்கொழுந்தைக்கொழுந்தாயெழுந்த
மூத்தனைமூவுருவின்முதலைமுதலாகிநின்ற
ஆத்தனைத்தான்படுக்குமந்தணர்தில்லையம்பலத்துள்
ஏத்தநின்றாடுகின்றவெம்பிரானடிசேர்வன்கொலோ. (௭)

254 சேர்வன்கொலோவன்னைமீர்திகழும்மலர்ப்பாதங்களை
ஆர்வங்கொளத்தழுவியணிநீறென்முலைக்கணியச்
சீர்வங்கம்வந்தணவுந்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தேர்வங்கைமான்மறியனெம்பிரானென்போனேசனையே. (௮)

255 நேசமுடையவர் தந்நெஞ்சுளேயிடங்கொண்டிருந்த
காய்சினமால்விடையூர்கண்ணுதலைக்காமருசீர்த்
தேசமிகுபுகழோர் தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தீசனையெவ்வுயிர்க்குமெம்மிறைவனென்றேத்துவனே. (௯)

256 இறைவனையேத்துகின்றவிளையாண்மொழியின்றமிழால்
மறைவலநாவலர்கண் மகிழ்ந்தேத்துசிற்றம்பலத்தை
அறைசெந்நெல்வான்கரும்பினணியாலைகள்சூழ்மயிலை
மறைவலவாலிசொல்லைமகிழ்ந்தேத்துகவானெளிதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# *புருடோத்தமநம்பி திருவிசைப்பா

## ௧. கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

257 வாரணிநறுமலர்வண்டுகெண்டுபஞ்சமஞ்செண்பகமாலைமாலை,
வாரணிவனமுலைமெலியும்வண்ணம்வந்துவந்திவைநம்மைமயக்கு
மாலோ, சீரணிமணிதிகழ்மாடமோங்குதில்லையம்பலத்தெங்கள்
செல்வன்வாரான், ஆரெனையருள்புரிந்தஞ்சலென்பாராவியின்ப
ரமன்றெனாதரவே. (௧)

258 ஆவியின்பரமன்றெனாதாவுமருவினையேனைவிட்டம்மவம்ம, பா
விவன்மனமிதுபையவ்வேபோய்ப்பனிமதிச்சடையரன்பாலதா
லோ, நீவியுநெகிழ்ச்சியுநிறையழிவுநெஞ்சமுந்தஞ்சமிலாமையா
லே, ஆவியின்வருத்தமிதாரறிவாரம்பலத்தருநடமாடுவானே.
(௨)

259 அம்பலத்தருநடமாடவேயுமியாதுகொல்விளைவதென்றஞ்சிநெ
ஞ்சம், உம்பர்கள்வன்பழியாளர்முன்னேயூட்டினர்நஞ்சையென்
றேயுமுய்யேன், வன்பலபடையுடைப்பூதஞ்சூழவானவர்கணங்க
ளைமாற்றியாங்கே, என்பெரும்பயலைமைதீரும்வண்ணமெழுந்
தருளாயெங்கள்வீதியூடே. (௩)

260 எழுந்தருளாயெங்கள்வீதியூடேயேதமின்முனிவரோடெழுந்த
ஞானக், கொழுந்ததுவாகியகூத்தனேநின்குழையணிகாதினின்மாத்
திரையும், செழுந்தடமலர்புரைகண்கண்மூன்றுஞ்செங்கனிவாயுமென்
சிந்தைவெள்வ, அழுந்துமென்னாருயிர்க்கென்செய்கேனோவரும்புன
லமருஞ்சடையினானே. (௪)

(பி-ம்.) * புருடோத்தமன்.

261 அரும்புனலலமருஞ்சடையினனையமரர்களடிபணிந்தரற்றவந்நாட், பெரும்புரமெரிசெய்தசிலையின்வார்த்தைபேசவுநையுமென்பேதைநெஞ்சம், கருந்தடமலர்புரைகண்டவண்டார்காரிகையார்முன்பென்பெண்மைதோற்றேன், திருந்தியமலரடிநசையினலேதில்லையம்பலத்தெங்கடேவதேவே. (ரு)

262 தில்லையம்பலத்தெங்கடேவதேவைத்தேறியவந்தணர்சிந்தைசெய்யும், எல்லையதாகியவெழில்கொள்சோதியென்னுயிர்காவல்கொண்டிருந்தவெந்தாய், பல்லையார்பசுந்தலையோடிடறிப்பாதமென்மலரடிநோவநீபோய், அல்லினிலருநடமாடிலெங்களாருயிர்காவலிங்கரிதுதானே. (சா)

263 ஆருயிர்காவலிங்கருமையாலேயந்தணர்மதலைநின்னடிபணியக், கூர்நுனைவேற்படைக்கூற்றஞ்சாயக்குரைகழல்பணிகொளமலைந்ததென்றால், ஆரினியமரர்கள்குறைவிலாதாரவரவர்படுதுயர்களையநின்ற, சீருயிரேயெங்கடில்லைவாணசேயிழையார்க்கினிவாழ்வரிதே.

264 சேயிழையார்க்கினிவாழ்வரிதுதிருச்சிற்றம்பலத்தெங்கள்செல்வனேநீ, தாயினுமிகநல்லையென்றடைந்தேன்றனிமையைநினைகிலைசங்கராவுன், பாயிரும்புலியதளின்னுடையும்பையமேலெடுத்தபொற்பாதமுங்கண், டேயிவளிழந்ததுசங்கமாவாவெங்களையாளுடையீசனேயோ. (அ)

265 எங்களையாளுடையீசனேயோவிளமுலைமுகநெக முயங்கிநின்பொற், பங்கயம்புரைமுகநோக்கிநோக்கிப்பனிமதிநிலவதென்மேற்படரச், செங்கயல்புரைகண்ணிமார்கண்முன்னேதிருச்சிற்றம்பலமுடனேபுகுந்து, அங்குனபணிபலசெய்துநாளுமருள்பெறினகலிடத்திருக்கலாமே. (கூ)

266 அருள்பெறினகலிடத்திருக்கலாமென்றமரர்கடலைவனுமயனுமாலும், இருவருமறிவுடையாரின்மிக்காரேத்துகின்றாரின்னமெங்கள்கூத்தை, மருள்படுமழலைமென்மொழியுமையாள்கணவனைவல்வினையாட்டியேனன், அருள்பெறவலமருநெஞ்சமாவாவாசையையளவறுத்தாரிங்காரே. (கo)

267 ஆசையையளவறுத்தாரிங்காரேயம்பலத்தருநடமாடுவானை, வாசநன்மலரணிகுழன்மடவார்வைகலுங்கலந்தெழுமாலைப்பூசல், மாசிலாமறைபலவோதுநாவன்வண்புருடோத்தமன்கண்டுரைத்த, வாசகமலர்கள்கொண்டேத்தவல்லார்மலைமகள்கணவனையணைவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்

# ௨. கோயில்

## பண் - பஞ்சமம்

### திருச்சிற்றம்பலம்

268 வானவர்கள்வேண்டவளர்நஞ்சையுண்டார்தாம்
ஊனமிலாவென்கையொளிவளைகள்கொள்வாரோ
தேனல்வரிவண்டறையுந்தில்லைச்சிற்றம்பலவர்
கானமரோவென்னுதேநாடகமேயாடுவரே. (௧)

269 ஆடிவருங்காரரவுமைம்மதியும்பைங்கொன்றை
சூடிவருமாகண்டேன்றோள்வளைகடோற்றாலும்
தேடியிமையோர்பரவுந்தில்லைச்சிற்றம்பலவர்
ஆடிவரும்போதருகேநிற்கவுமோவொட்டாரோ. (௨)

270 ஒட்டாவகையவுணர்முப்புரங்களோரம்பாற்
பட்டாங்கழல்விழுங்கவெய்துகந்தபண்பினர்
சிட்டார்மறையோவாத்தில்லைச்சிற்றம்பலவர்
கொட்டாநடமாடக்கோல்வளைகள்கொள்வாரே. (௩)

271 ஆரேயிவைபடுவாரையங்கொளவந்து
போரேடியென்றுபுருவமிடுகின்றார்
தேரார்விழவோவாத்தில்லைச்சிற்றம்பலவர்
தீராநோய்செய்வாரையொக்கின்றார்காணீரே. (௪)

272 காணீரேயென்னுடையகைவளைகள்கொண்டார்தாம்
சேணார்மணிமாடத்தில்லைச்சிற்றம்பலவர்
பூணாரவனமுலைமேற்பூவம்பார்காமவேள்
ஆணுடுகின்றவாகண்டுமருளாரே. (௫)

273 ஏயிவரேவானவர்க்கும்வானவரேயென்பாரால்
தாயிவரேயெல்லார்க்குந்தந்தையுமாமென்பாரால்
தேய்மதியஞ்சூடியதில்லைச்சிற்றம்பலவர்
வாயினகேட்டறிவார்வையகத்தாராவாரே. (௬)

274 ஆவாவிவர்தந்திருவடிகொண்டந்தகன்றன்
மூவாவுடலவியக்கொன்றுகந்தமுக்கண்ணர்
தேவாமறைபயிலுந்தில்லைச்சிற்றம்பலவர்
கோவாவினவளைகள்கொள்வாரோவென்னையே. (௭)

275 என்னைவலிவாராரென்றவிலங்கையர்கோன்
மன்னுமுடிகணெரித்தமணவாளர்
செந்நெல்விளைகழனித்தில்லைச்சிற்றம்பலவர்
முன்னந்தான்கண்டறிவாரொவ்வாரிம்முத்தரே. (௮)

276 முத்தர்முதுபகலேவந்தென்றனில்புகுந்து
பத்தர்பலியிடுகவென்றெங்குப்பார்க்கின்றார்
சித்தர்கணம்பயிலுந்தில்லைச்சிற்றம்பலவர்
கைத்தலங்கள்வீசிநின்றாடுங்காணேக்காரே. (கூ)

277 நோக்காததன்மையாணேக்கிலோமியாமென்று
மாற்காழியீந்துமலரோனைநிந்தித்துச்
சேக்காதலித்தேறுந்தில்லைசசிற்றம்பலவர்
ஊர்க்கேவந்தென்வளைகள்கொள்வாரோவொண்ணுதலீர். (க௦)

278 ஒண்ணுதலிகாரணமாவும்பர்தொழுதேத்தும்
கண்ணுதலான்றன்னைப்புருடோத்தமன்சொன்ன
பண்ணுதலைப்பத்தும்பயின்றாடிப்பாடினார்
எண்ணுதலைப்பட்டங்கினிதாவிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்

---

# * சேதிராயர் திருவிசைப்பா

## கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

279 சேலுலாம்வயற்றில்லையுளீருமைச்
சாலநாளயன்சார்வதிலை விவள்
வேலையார்விடமுண்டுகந்தீரென்று
மாலதாகுமென்வாணுதலே. (க)

280 வாணுதற்கொடிமாலதுவாய்மிக
நாணமற்றனணறியேனினிச்
சேணுதற்பொலிதில்லையுளீருமைக்
காணிலெய்ப்பிலள்காரிகையே. (உ)

218 காரிகைக்கருளீர்கருமால்கரி
ஈருரித்தெழுபோர்வையினீர்மிகு
சீர்யற்றில்லையாய்சிவனேயென்று
வேரிநற்குழலாளிவள்விம்முமே. (ங)

282 விம்மிவிம்மியேவெய்துயிர்த்தாளெனு
உம்மையேநினைந்தேத்துமொன்றாகிலள்
செம்மலோர்பயிறில்லையுளீரெங்கள்
அம்மெலோதியயர்வுறுமே. (௪)

---

(பி - ம்.) * சேதியர், சேதிராயபிரான்

283 அயர்வுற்றஞ்சலிகூப்பியந்தோவெனை
உயவுங்கொன்றையந்தாரருளாயெனும்
செயலுற்றார்மதிற்றில்லையுளீரிவண்
மயலுற்றாளென்றன்மாதிவளே. (ரு)

284 மாதொர்கூறன்வண்டார்கொன்றைமார்பனென்
றோதிலுய்வெனொண்பைங்கிளியேயெனும்
சேதித்தீர்சிரநான்முகனைத்தில்லை
வாதித்தீரென்மடக்கொடியையே. (சா)

285 கொடியைக்கோமளச்சாதியைக்கொம்பிளம்
பிடியையென்செயத்திட்டீர்பகைத்தார்புரம்
இடியச்செஞ்சிலைகால்வளைத்தீரென்று
முடியுநீர்செய்தமூச்சறவே. (எ)

286 அறவனேயன்றுபன்றிப்பினேகிய
மறவனேயெனைவாதைசெய்யேலெனும்
சிறைவண்டார்பொழிற்றில்லையுளீரெனும்
பிறைகுலாநுதற்பெய்வளையே. (அ)

287 அன்றருக்கனைப்பல்லிறுத்தானையைக்
கொன்றுகாலனைக்கோளிழைத்தீரெனும்
தென்றலார்பொழிற்றில்லையுளீரிவள்
ஒன்றுமாகிலளும்பொருட்டே. (கூ)

288 எயுமாறெழிற்சேதிபர்கோன்றில்லை
நாயனாரைநயந்துரைசெய்தன
தூயவாறுரைப்பார்துறக்கத்திடை
ஆயவின்பமெய்தியிருப்பரே. (க0)

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா முற்றிற்று.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

## சேந்தனாருளிச்செய்த

# திருப்பல்லாண்டு

### கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

289 மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகல, பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம்விளங்க, அன்னநடைமடவாளுமைகோனடியோமுக்கருள்புரிந்து, பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே. (௧)

290 மிண்டுமனத்தவர்போமின்கண்மெய்யடியார்கள்விரைந்துவம்மின், கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற்காட்செய்மின்குழாம்புகுந், தண்டங்கடந்தபொருளளவில்லதோரானந்தவெள்ளப்பொருள், பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்றேபல்லாண்டுகூறுதுமே. (௨)

291 நிட்டையிலாவுடனீத்தென்னையாண்டநிகரிலாவண்ணங்களும், சிட்டன்சிவனடியாரைச்சீராட்டுந்திறங்களுமேசிந்தித், தட்டமூர்த்திக்கென்னகநெகவூறுமமிர்தினுக்காலநீழற், பட்டனுக்கென்னைத்தன்பாற்படுத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௩)

292 சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்ததூய்மனத்தொண்டருள்ளீர். சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்சிறுநெறிசேராமே, வில்லாண்டகனகத்திரண்மேருவிடங்கன்விடைப்பாகன், பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௪)

293 புரந்தரன்மாலயன்பூசலிட்டோலமிட்டின்னம்புகலரிதாய், இரந்திரந்தழைப்பவென்னுயிராண்டகோவினுக்கென்செயவல்லமென்றும், கரந்துங்கரவாதகற்பகனாகிக்கரையில்கருணைக்கடல், பரந்துநிரந்தும்வரம்பிலாப்பாங்கற்கேபல்லாண்டுகூறுதுமே. (௫)

294 சேவிக்கவந் தயனிந் திரன்செங்கண் மாலெங்குந் திசை திசைய
ன,கூவிக்கவர்ந் துநெருங்கிக்குழாங்குழாமாய்நின் றுகூத் தாடும், ஆவிக்
கமுதையென்னார்வத் தனத் தினையப்பனையொப்பமரா், பாவிக்கும்பா
வகத் தப்புறத் தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௬)

295 சீருந்திருவும்பொலியச்சிவலோகநாயகன்சேவடிக்கீழ்
ஆரும்பெறாதவறிவுபெற்றேன்பெற்றதார்பெறுவாருலகில்
ஊருமுலகுங்கழறவுழறியுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம்பல்லாண்டுகூறுதுமே. (௭)

296 சேலுங்கயலுந் திளைக்குங்கண்ணாரிளங்கொங்கையிற்செங்குங்கு
மம்,போலும்பொடியணிமார்பிலங்குமென் றுபுண்ணியர்போற்றிசைப்
ப,மாலுமயனுமறியாநெறி தந் துவந்தென்மனத் தகத்தே,பாலுமமுதமு
மொத் துநின்றானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௮)

297 பாலுக்குப்பாலகன்வேண்டியழு திடப்பாற்கடலீந் தபிரான்,மா
லுக்குச்சக்கரமன் றருள்செய் தவன்மன்னிய தில்லைதன்னுள், ஆலிக்கு
மந் தணர்வாழ்கின் றசிற்றம்பலமேயிடமாகப், பாலித் துநட்டம்பயில
வல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௯)

298 தாதையைத் தாளறவீசியசண்டிக்கிவ்வண்டத்தொடுமுடனே,
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும்போனகமுமருளிச், சோதி
மணிமுடித் தாமமுநாமமுந்தொண்டர்க்குநாயகமும், பாதகத் துக்குப்
பரிசுவைத் தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௧௦)

299 குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலியெங்குங்குழாம்
பெருகி,விழவொலிவிண்ணளவுஞ்சென் றுவிம்மிமிகுதிருவாரூரில், ம
ழவிடையாற்குவழிவழியாளாய்மணஞ்செய்குடிப்பிறந்த, பழவடியா
ரொடுங்கூடியெம்மானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௧௧)

300 ஆரார்வந் தாரமரர்குழாத் திலணியுடையாதிரைநாள்
நாராயணனொடுநான்முகனங்கியிரவியுமிந் திரனும்
தேரார்வீதியிற்றேவர்குழாங்கடிசையனைத் துநிறைந் து
பாரார்தொல்புகழ்பாடியுமாடியும்பல்லாண்டுகூறுதுமே. (௧௨)

301 எந்தையெந் தாய்சுற்றமுற்றுமெமக்கமுதாமெம்பிரானென்
றென் றுமே, சிந்தைசெய்யுஞ்சிவன்சீரடியாரடிநாயன்செப்புறை,அந்
தமிலானந் தச்*சேந் தனெனைப்புகுந் தாண்டுகொண்டாருயிர்மேற்,
பந் தம்பிரியப்பரிந் தவனேயென்றுபல்லாண்டுகூறுதுமே. (௧௩)

## திருச்சிற்றம்பலம்

## திருப்பல்லாண்டு முற்றிற்று

---

(பி - ம்.) * செந்தே

# குறிப்புரை

1. தித்திக்கும் தேன்: தித்திக்குமென்னும் பெயரெச்சம் இத்தன்மைத்தெனும் நிகழ்காலம்பட நின்றது. 2. இருள் - அஞ்ஞானம். 3. சசிகண்ட சிகண்டா - பிறைச் சந்திரனை அணிந்த திருமுடியை யுடையோய். 5. நற்றவம் - பிறவி அறும்படி செய்யும் தவம். 7. தனதன் - குபேரன். சனக - தந்தையே. அமரர் சேகரன் - தேவர்களது முடிமீது உள்ளவன். 8. பிறவி - பிறப்பு. 9. எச்சம் - யாகம். சொக்கன் - பேரழகுடையவன். 10. கனகன் - இரணியன். ஏறுசேவகன் - உயர்ந்த வீரன். அரட்டு - குறும்பு. 12. பியர் - கழுத்து; போலி. மயர் - மயக்கம். 14. பிரம்பிரி - ஒருவகைநெல். 15. ஓத்து - வேதம். இலயம் - தாளம். 16. புதணம் - மதிலுள் மேடை. 17. அழைப்பு - பொருள் புணராத ஓசை. செது மதி - அழிதற்குக்காரணமான புத்தி; "செதுமதித்தக்கன்" **(தேவாரம்: திருஞானசம்பந்தர்.)** 20. குழை காது - குழைந்த காது. 23. பொன் - மகள். மறவன் - வீரன். குலாத்தில்லை: **திருவாசகம்,** குலாப்பத்து. 24. என்னும் - என்பாள். 26. மறி - மான்குட்டி. 27. வீரை - கடல். சே - காளை. 29. கடுப்பு - மிகுதி. 31. மரவு - மரவமரம். சுரவா - தேவனே. 32. முண்டம் - நெற்றி. 34. உயர்ந்த மூவாயிரவரையும் தாழ்ந்த என்னையும் ஒப்ப மகிழ்ந்து. அமுது: உமாதேவியார். 35. இணங்கு - ஒப்பு. குண்டப்பிணங்கள் - தாழ்ந்த பிணங்கள் போன்றவர். 36. எட்டு உரு - அஷ்டமூர்த்தம். பிரட்டர் - பிரஷ்டர். 37. அரட்டர் - குறும்பர். 39. அசிக்க - சிரிக்க. 40. திரு - பாக்கியம். 42. எக்கர்: "எக்கராமமண்கையர்" **(தே. திருஞான.)** 43. செண்டடித்து: "அயன்றலை கொண்டு செண்டாடல் பாடி" **(திருவாசகம்.)** 44. கொற்றவாசல் - கோயிலின் வாசல். தெண்ணர்: "தெண்ணர் கற்பழிக்கத் திருவுள்ளமே" **(தே. திருஞான.)** 45. உறைப்பு - உறுதி. 46. புயல்வணற்கு அருளி - திருமாலுக்குச் சக்கரம் அளித்து. 49. சசி - சந்திரன். 50. புராணம் - பழமை. 51. கனஅனைய செல்வம்: 16. ஐவர்-ஐம்பொறிகள். 52. கங்கையைப்போன்ற புனித நீரையுடைய அரிசில். தான்றோன்றி - ஸ்வயம்புமூர்த்தி. 54.

ஏர்கொள் முக்கண் : பிறர்கண்போலாது மூன்றாயிருப்பினும் அவை ஓரழகுடையன என்பது கருத்து. 55. வேள் - மன்மதன். 56. ஆம்தனை - இயன்ற அளவு. சேந்தன் - முருகக் கடவுள். 57. வேடு : சாதியை யுணர்த்தியது. 58-68. அந்தாதித் தொடையோடு மண்டலித்து வந்தன. 58. சாந்தை - சாத்தனூர் என்பதன் மரூஉ. 60. தருண இந்து - இளம்பிறை. 62. வலது - வன்மை. 64. கிற்போம் - செய்து முடிப்போம்; இது தேவாரது உட்கோள். 61. குன்று ஏந்தி - திருமால். பரம் - அளவு. 69-79. அந்தாதித் தொடையோடு மண்டலித்து வந்தன. 69. குரா : தலவிருட்சம். 70. பீர் - பசலை. நயக்கும் - விரும்பும். 71. காப்பவன் - காக்கத் தக்கவன். 73. கொளாது - கொள்ளாதது. திணம் - திண்ணம். 76. உழிஞை - மதிலைவளைத்தல். திகை - திசை. 77. மடல் - மடலேறுதலை. 78. குருண்ட - சுருண்ட; 217; "குருண்டவார் குழற்சடையுண்டைக் குழகனை" (**தே. திருஞான.**); 80. கவை- பிளவு. அணல் - கழுத்து. மொழுப்பு - முகப்பு; தொகுதி தொழுதி என்றாற் போன்றது இது. திணர் - நெருங்கிய; "வண்டு திணர்த்த வயல்" (**திவ்யப்பிரபந்தம்,** தனியன்.) 81. நீலம் - நீலப்பூ. செய்யினது வரம்பில் ; செய் - வயல். 82. முருக்கு - முள்ளு முருங்கை. மாந்தளிர்க்குத் தீ ; "சீதப்புனலுண்டெரியைக்காலும், சூதப்பொழில்" (**தே. சுந்தரர்.**) 83. வான் - தேவர் ; ஆகு பெயர். 84. மொட்டித்து - குவித்து. என்பெலாம் உருகும் அன்பர் ; "கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுருகக் குனிக்கும், பாம்பலங் காரப் பரன்"(**கோவையார்.**) 87. அமரித்து- விரும்பி. தீர்த்தநீர் - பரிசுத்தமான நீர். 91. கடல்போல் முழங்கும். நோக்கு - கண். ஆதித்தேச்சரம் : பொன் விளைந்த களத்தூரிலுள்ள ஆதித்தேச்சுரமென்று கூறுவர். 93. ஒருபாற் செய்யர் ; ஒருபால் - வலப்புறம். 94. அராக்குழை : "பாம்பிணை யாக் குழைகொண்டோன்" (**கோவையார்,** 38.) 95. களபம் - பூச்சு. 96. அச்சோ - அழகிதே; "மழவிடையுடையான் மேனி வனப்பினை நோக்கியச்சோ, அழகிய பிரானே யென்ன" (**திருவிளையாடல்,** 36:29.) 97. மைக்கடா - கரிய நிறமுள்ள கடா ; மேகம் போன்ற கடா எனினுமாம் ; "ஈரநீர்படிந்திந்நிலத்தே சில, கார்களென்னவருங்கருமேதிகள் (**கம்பராமாயணம்.**) 99. களம் - கழுத்து ; "குவளைக் களத்தம் பலவன்" (**கோவையார்,** 33.) திருவடி நிலை - பாதுகை. 100. இருள் - அஞ்ஞானம்.

101. பதம் - பாதம். அலம்ப - ஒலிக்க. கம்பலம் - கம்பலை; உரிச்சொல் ஈறு திரிந்தது; **சீவக.** 56, 1197, **ந.** 103. இது வண்டுவிடுதூது. 105. புள் - அன்னப்பறவை; தோழி...போம்; "இரவெல்லாந், தோழி துணையாத்துயர் தீரும்" (**காரிகை, 44, மேற்.**) 106. ஆழி - கடல். கிஞ்சுகம் - முள்ளுமுருங்கைப்பூ. 107. சக்கடை - ஒருவகை வாத்தியம்; ஜயகண்டையென்பதன் சிதைவு போலும்; "சகடையோ டார்த்த வன்றே" (**கம்ப.** பிரமாத்திர. 5.) தெண்டு - கற்றை. குண்டை - எருது. கிழை - கிளையென்பதன் போலிபோலும். 108. யாழும் வீணையும் வேறு வேறு; "இன்னிசை வீணையர் யாழினரொருபால்" (**திருவாசகம்.**) 109. கேதகை - தாழை. தாழையின் நிழலைக் கெண்டை குருகு என்று அஞ்சுதல்: "மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக்குருகென்று, தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறைய" (**தே. திருஞான.**) 110. அந்தி - செவ்வான்; "செவ்வானன்ன மேனி" (**அகநானூறு,** கடவுள்.) சிந்தையுங்காணுமை: ஒரு கால் நினைத்தமாத்திரத்திற் சித்த விருத்தி யொடுங்குதல் பற்றி. கெந்தியா - தத்தி. 111. கித்தி- ஒற்றைக்காலால் தாவி நடந்து. 112. ஆரணம் - வேதம். 113. விழுங்குதீங்கனி: "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியை" (**தே.**); 47. 114. கல்லைப்போல் நகாத. 115. கிடை - நெட்டி. பாடு - ஒளியவிதல். 116. கலாம் - கலகம். 117. நிறை - சால்; "பீரிவர்பு பரந்த நீரறு நிறைமுதல்" (**பதிற்றுப்பத்து,** 15 : 10.) 118. ஆலம் - விஷம். தனிவடம் - ஒற்றைவடம்; இதனை ஏகாவலி யென்பர்; **தக்கயாகப்பரணி,** 340, உரை. 121. ஆலை - கரும்பு ஆலையிலுள்ள. 122. கோடை: கோட்டுரென்பதன் மரூஉ. திரைலோக்கிய சுந்தரன்: இக்காலத்துத் திரைலோக்கியென வழங்கும் ஊரிலுள்ள இறைவன் திருநாமம். 124. வம்பு - புதியதாக. அளிந்த - கனிந்த. 126. முத்தம் - கண்ணீர்த்துளி; "பூப்போலுண் கண் புலம்புமுத்துறைப்ப" (**முல்லைப்பாட்டு,** 23.) ஆவா: இரக்கப் பொருளதோர் இடைச்சொல். 129. நெருப்பென்றது நிலவை. நின்கையில் யாழ்; "வருங்கடன் மீளநின்றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" (**தே.** அப்பர்.) பாதிரம்போது - பாதிரிப்பூ. 130. ஆருத - தணியாத. 133. பெரிய தன்மை சொல்லற்கு அருமையின் 'அங்ஙனே' என்றூர். வழி மொழிமாலை - வழிபாடு கூறும் பாமாலை. 136. தரங்கம் - கங்கையின் அலை. அகவுயிர்: 112. ஏறுசேவகன் - உயர்ந்த வீரன். 138 : 1. "அண்டங்க

ளெல்லா மணுவாக வணுக்களெல்லாம், அண்டங்களாகப் பெரி தாய்ச்சிறிதாயினுனும்" (திருவிளை. கடவுள். 1.) 139. தாளம் - முத்து. நிசிசரரிருவரோடு ஒருவர்: திரிபுரத்தலைவர்; தே. சுந்தரர், திருப்புன்கூர். 140. தத்தை அங்கையார் - கிளி போன்ற மொழி கிளையுடைய மகளிர். 141. பறைந்து - தேய்ந்து; பாவத்திற்கு நீர் உவமை. 142. மருங்கில் - இடப்பக்கத்தில். அனுங்கும் - வருந் தும். கொடியிடை: உமாதேவியார். 143. அங்கை-உள்ளங்கையில். ஆழி - ஆஞ்ஞா சக்கரம்; சக்கரரேகையுமாம். 144. ஆளாக ஆண்டு. 145. 1-2.: 133, 169. 146. முகப்பு - முன்னே. 148. ஐவர் - ஐம்பொறிகள். சாலேகம் - பலகணி; "சாலேகஞ் சார நட" (நன் னூல், 396, மயிலை. மேற்.) 149. யான் ஆர் - யான் எந்த இயை புடையேன். பொம்மென: ஒலிக் குறிப்பு. 150. வாய்தல் - வாசல்.

151. குழகன் - இளையவன். 152. சாட்டியம் - ஜாட்டியம்; இத்தலத்தில் ஜ்வரதேவதை இறைவனைப் பூசித்த காரணத்தால் இத் தலம் இப்பெயர் பெற்றது. காதுகள் தாழ்ந்தவா பெரியவா என்ன வியப்பு என்க. பின் வருவனவற்றையும் இங்ஙனமே கொள்க; பெரியவா - பெரியவாறு. 153. பரிகலம் - உண்கலம். பட்டவர்த் தனம் - ஏறும் யானை. சடையே முடி. 154. கவந்திகை - கந்தை களால் ஆகிய ஒருவகைப் போர்வை; இச்சொல் கவந்தி எனவும் வழங் கும்; "ஓடுங்கவந் தியுமே யுறவென்றிட்டுள்கசிந்து" (திருவாசகம்.) அரவம் கோவணம். 156. சிவபுரன்: சிவபுரமென்னும் திருப் பதியையுடையவன். 159. தோழன் தனதன்: 7, 160; தனதன் - குபேரன். "முப்புரங்கள் செற்ற, சேவலோன் றுணைவனான செங்கை யோன் றங்கை" (கம்ப. சூர்ப்ப.) 157. அனிலம் - காற்று. 161. படுகர்- படுகை. 162. உலகு - உயிர்கள். அச்சோ: வியப்பிடைச் சொல். பதணம் - மதிலுள் மேடை. இஞ்சி - மதில். 163. வெளியேபோந் தனவில்லை. கிடங்கு - அகழி. 164. குடைநிழலில். முத்தினொளிக்கு வெண்ணிலா. கோங்கு இணர் குடைக்கு: "குடைமாக மென வேந்திக் கோங்கம் போதவிழ்ந்தனவே" (சூளாமணி, இரதநூ புரச். 52.) 165. அங்குலி - விரல். 166. களிற்றீட்டத்திற்கு மலைகள் உவமை. 167. குருளும் - சுருளும். குவால் - குவியல். 169. என் நெஞ்சு நெடுங்கோயிலாக வீற்றிருந்த. 172. சரளம் - ஒரு மரம். 175. வினைபடுகனகம்-பல ஆபரணங்களாகத் தொழிற்பட்ட பொன். துங்கு இருள் - செறிந்த இருளையுடைய. 176. மணியினுள் சோதி கலந்தாங்கு. 179. ஆதனேன் - அறிவில்லாதேன். 181. புலம் -

அறிவு. 183. சரியாகிய வளை. வீதி விடங்கர் - வீதியிலும் எழுந்தருளும் விடங்கர்; விடங்கர் - உளியாற் செய்யப்படாதவர்; 187. விடையேறி : விளி 189. சேரமான்நண்பரான ஆரூரன்; ஆரூரன் - சுந்தரமூர்த்தி நாயனார். 191. களகம் - சாந்து; "திண் களகமதிள்புடை சூழ்திருநறையூர்" (**பெரிய திருமொழி.**) 192. ஆடகம் - நால்வகைப்பொன்னுள் ஒன்று. 193. அரவிக்கும் - ஒலிக்கும்; "அரவித்துக் கடைய" (**தே.** ) 196. அஞ்சுவேள்வி : விருந்தோம்பல் முதலிய ஐவகை யாகங்கள்; ஆவேபடுப்பார் : 253. 198. ஆன்ஐஞ்சு = ஆன் ஐந்து - பஞ்சகவ்வியம்; ஐந்து - அஞ்சு. 199. மால் வரங்கிடத்தல்: "மற்றுங்கதுங்காட்டிடென்று, வரங் கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே" (**கோவை யார், 86.**)

204. சோழன் - முதற்பராந்தகன். கோழி-உறையூர். தஞ்சை. தஞ்சாவூர். ஆரா - தெவிட்டாத. 205. துச்சு = துச்சம் - இழிவு. நச்சுதல் - விரும்புதல். 206. என்அளவே - என்மட்டில். வம்பு - புதுமை. நம்புதல் - விரும்புதல். 207. எரியில் நீரிருந்தால் புறவாயில் பொசியுமென்பது ஒரு பழமொழி. 208. நம்பான் - நம்பன்; "நம்பான் மேய நன்னகர் போலு நமரங்காள்" (**தே.** திருஞான.) 210. களிறு - அயிராவணம் என்னும் யானை. 215. கார் - மேகம். 216. அலம்பி - ஒலித்து. 220. மா - ஈண்டு யானை. 222. மாத்திரை - ஒருவகையணி; 260. ஐய - வியக்கத்தக்க. 223. திளைக்கின்றன - இடைவிடாமல் தங்குகின்றன. 224. தொறுக்கள்-பசுக்கள். 225. நீரொடு பூ அவைதூவித் தொழுது. 226–35. இப்பதிகம் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது. 226. பனி திருநீற்றுக்கு உவமை. திவள - விளங்க. தழல்மெழுகு - தழலில் இடப்பட்ட மெழுகு. 227. ஒட்டந்த - ஒட்டந்தந்த என்பதன்மரூஉ. அலந்தேன் - துன்பமுற்றேன். 228. சிலந்தியை அரசாள்கவென்றது கோச்செங்கட் சோழராக்கியதை. 229. பொன் - பசலை நிறம். 231. அரவுக்கு அஞ்சுதல் பிறையின் செயல். 233. நிறைமை - நிறை; மை : பகுதிப்பொருள் விகுதி. 234. ஏனம் - பன்றி. 235. இளையவள் - தலைவி. 236. செல்வாய் - மேகம் பொருந்திய. 237. நிரந்த - வரிசையாக உள்ள. பியல் - பின்புறம். 239. தழையாகிய பீலிகள்; "விழிக்குந் தழைப் பீலி யொடேலமுந்தி" (**தே. சுந்தரர்.**) நிவவு - வெள்ளாறு. "கௌவைக் களிற்றின் மருப்பும் பொருப்பில் கமழ்சந்து முந்தி

திவாவலங் கொள், தெய்வப் புனல்சூழ்ந் தழகாயதில்லை'' (திவ்ய. பெரிய. 3.2 : 7) வாமம் - இடப்பக்கம். 244. அமரர்பதி - இந்திரன். 246. பால்நேர் பாடல் - பாலை ஒத்த இனிய பாடல். 247 - 56. இப்பத்தும் அந்தாதித் தொடை. 248. பணை மாளிகை - பெருத்த மாளிகை. 250. உத்தரியம் - மேலாடை.

253. மூத்தன் - எல்லார் யாக்கைக்கும் முன்னே தனதிச்சையாற் கொள்ளப்பட்ட திருமேனியையுடையனாதலின் எல்லார்க்கும் மூத்தவன். நின்ற எம்பிரான் என இயைக்க. 254. வங்கம் - கப்பல். 256. செங்நெலும் வாழைக் கரும்பின் அணிஆலைகளும். 257-67. இவை அந்தாதித் தொடையன. 257. வார் - நீட்சி. பஞ்சமம் - ஒரு ஸ்வரம். வார் - கச்சு. ஆவியின் பரம் - உயிரின் அளவு. 259. பயலைமை - பசலைநிறம்; மகளிர்க்குப் பிரிவின்கண் வரும் நிற வேறுபாடு; மை. பகுதிப் பொருள் விகுதி. 260. அலமரும் - சுழலும். 263. அந்தணர் மதலை - மார்க்கண்டேயர். 264. ஆவா: இரக்கக்குறிப்பு இடைச்சொல். 265. உன்பணி - உன்னுடைய பணிவிடைகள். 267. மாலைப்பூசல் - மாலையில் உண்டாகும் பூசலை. 268-78. அந்தாதித்தொடை. 269. ஐமதி - அழகிய பிறை. 270. பட்டு - அழிந்து. 274. அந்தகன் - யமன். கோவா - கோவாத. 275. வலிவார் - துன்புறுத்துவார். 277. சே - விடை. 279-88. அந்தாதித்தொடை. 279. மால் - மயக்கம்; அயன்சார்வதனால் இவள் திருமால் ஆவளென்பது வேறு பொருள். 280. எய்ப்பு - இளைப்பு. 281. வேரி - இருவேரி. 283. எனை உய - என்னை உய்யச் செய்ய. 285. கால் - வில்லின்கால். 288. தில்லை நாயகனார்: 'திருக்கோயில் திருவாயில்......என்பவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயனா ரென்றது போலக் கொள்க' (கோவையார், 1. பேர்.) 289. அகல: வியங்கோள்வினை. 291. அட்டமூர்த்தி - எட்டுவகை வடிவமுடையவன்; ''அட்டமூர்த்தியண்ணலை கைதொழ'' (தே. அப்பர்.) பட்டன் - ஆசாரியன். 292. பதம் - பதவி. 293. புகல் அரிதாய் - இன்ன தன்மையென்று சொல்லுதற்கு அரிதாகி. பாங்கன் - நன்மையுடையவன். 294. பாவகம் - எண்ணம். 297. பாலகன்: உபமன்யுமுனிவர். பாலித்து - காத்து. 298. பாதகமென்றது தந்தை தாளறவெறிந்ததனை. 299. குழலையடுத்து யாழைக்கூறியது இசைத் தமிழின் நுட்பம். 301. எந்தாய்=எம்தாய்.

# செய்யுள் முதற்குறிப்பகராதி

## திருவிசைப்பா

[எண் - செய்யுள் எண்]


அக்கணு...டமு 51
அக்கணு...டென் 116
அகலோகமெல் 190
அங்கைகொண்ட 142
அண்டமோரணு 138
அணியுமிழ்சோ 176
அதித்தவரக்க 243
அதுமதியிதுவென் 17
அந்திபோலுருவு 110
அம்பராவனலா 120
அம்பலத்தருந 259
அம்பளிங்குபக 124
அயர்வுற்றஞ்சலி 283
அரிவையோர் 250
அருட்டிரட்செம் 37
அரும்புனல்லம 267
அரும்பேதைக் 161
அருளுமாறருளி 192
அருள்செய்தாடு 229
அருள்பெறினக 266
அல்லாய்ப்பக 236
அல்லியம்பூம்பழ 187
அலந்துபோயி 228
அற்புதத்தெய்வ 135
அறவனே 286
அறிவுமிக்கநன் 233
அன்றருக்கனை 287
அன்னநடையா 237
அன்னமாய் 133
அனலமேபுனலே 157
ஆசையையளவ 267
ஆடரவாடவாடு 40
ஆடிவருங்கா 269
ஆயாதசமயங்க 208
ஆயிரங்கமல 53
ஆரணத்தேன் 132
ஆருயிர்காவ 263
ஆரேயிவைபடு 271
ஆவாவிவர் 274
ஆவியின்பரம 258
ஆறுதபேரன்பி 130
இடர்கெடுத் 2
இணங்கிலாவீச 35
இத்தெய்வநெறி 50
இந்திரலோகமு 174
இருந்திரைத்தர 90
இலையார்கதிர்வே 201
இவ்வரும்பிறவிப் 81
இவளைவாரிளமெ 70
இளமென்முலை 238
இறைவனையென் 251
இறைவனையேத் 256
உடையும்பாய் 232
உண்ணெகிழ் 134
உம்பர்நாடிம்பர் 89
உயர்கொடியாடை 12
உருக்கியென்னுள் 41
உருவத்தெரி 193
உலகெலாந்தொ 162
உளங்கொளமது 56
உற்றுயென்னு 33
உறவாகியயோக 23
எங்களையா 265
எச்சனைத்தலை 43
எட்டுருவிரவி 36
எண்ணில்பல் 54
எம்பந்தவல்வி 188
எரிதருகரிகாட் 178
எவருமாமறை 166

எழிலையாழ் 179
எழுந்தருளா 260
என்செய்கோந் 106
என்னையுன்பாத 119
என்னைவலி 275
ஏகநாயகனை 46
ஏயிவரேவான 273
ஏயுமாறெழிற் 288
ஏர்கொள்கற்பக 21
ஐயபொட்டிட்ட 136
ஒக்கவோட்டந்த 227
ஓட்டாவகை 270
ஒண்ணுதலிகா 278
ஒருங்கிருங் 182
ஒழிவொன்றிலா 65
ஒளிவளர் 1
ஓம்புகையு 240
ஓவாமுத்தீயஞ்சு 196
கங்கைநீரரிசிற் 52
கடியார்கணம் 186
கடுப்பாய்ப்பறை 29
கடுவினைப்பாசக் 148
கண்ணியன் 147
கண்பனியரும்ப 84
கணம்விரிகுடுமி 80
கணியெரிவிசிறு 19
கரியரேயிடந் 93
கருவளர்மேகத் 13
கரைகடலொலி 146
கலங்கலம்பொ 181
கலைகடம்பொரு 91
கள்ளவிழ்தாம 249
களகமணி 191
களிவானுலகிற் 199
களையாவுடலோ 189
கற்றவர்விழுங்கு 47
கன்னகாவுள் 114
காடாடுபல்கணஞ் 24
காண்பதியா 248
காணீரேயெ 272
காமனைக்கால 22
காரிகைக்க 281
கானேவரு 25
கித்திநின்றாடு 111
கிளையிளஞ்சேய 74
கிற்போமெனத் 64
குணமணிக்குரு 73
குதிரைமாவொடு 220
குமுதமே 99
குரவங்கோங் 241
குருண்டவார் 217
குன்றேந்தி 67
கூத்தனை 253
கேடிலாமெய்ந் 115
கைக்குவான் 183
கொடியைக் 285
கொழுந்திரள் 79
கோலமலர் 247
கோலமே 5
கோவினைப் 71
சடைகெழுமகுட 164
சந்தனகளபந் 92
சந்துமகிலுந் 239
சரளமந்தார 172
சரிந்ததுகிறளர் 131
சலம்பொற்றா 216
சித்தர்தேவரிய 242
சித்தனேயருளா 160
சிறப்புடையடியார் 45
சீர்த்ததிண்புவ 87
சீரான்மல்கு 204
சுருதிவானவஞ 137
செக்கரொத்திர 42
செங்கணு 159
செம்பொனே 158
செம்மனக்கிழ 149
செய்யகோடே 222
செழுந்தென்ற 27
செற்றுவன்புர 223
சேடருறைதில் 194
சேயிழையார்க் 264
சேர்வன்கொ 254
சேலுலாம்வய 279
சேவேந்துவெல் 30
சொன்னவின் 150
தக்கன்வெங்க 55
தக்கனற்றலையு 9
தத்தையங்கனை 140
தம்பானைசாயப் 206
தரவார்புனஞ் 31
தருணேந்துசே 61
தழைதவழ்மொ 107
தளிரொளிமணி 101
தற்பரம்பொரு 3
தன்சோதியெழு 128
தன்னகமழலை 108
தன்னடிநிழற்கீ 49
தன்தனற்றோ 7
தனிப்பெருந்தா 168
தனியரெத்தனை 171
தாட்டரும்பழன 161
தாயினேரிரங்கு 82
தானமர்பொருது 72
திக்கடாநினைந்து 97
திசைக்குமிக்குல 39

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருநீறிடாவுரு | 32 | நையாதமனத் | 123 | மங்கையோடி | 143 |
| திருநுதல்விழியு | 103 | நோக்காததன் | 277 | மடங்கலாய்க் | 10 |
| திருநெடுமாலி | 20 | படங்கொள் | 221 | மண்டலத்தொ | 48 |
| திருமகன்முருகன் | 156 | படுமதமுமிடவ | 210 | மண்ணோடு | 211 |
| திருவருள்புரிந் | 144 | பண்ணியத | 141 | மருண்டுறை | 78 |
| தில்லையம்பலத் | 262 | பத்தியாயுணர் | 184 | மறைகளுமமரர் | 11 |
| திலகநுதலுமை | 62 | பதிகநான் | 155 | மாதிமணங்கம | 59 |
| திறம்பியபிறவி | 8 | பந்தபாச | 219 | மாதோர்கூ | 284 |
| தீத்திரளுருவ | 86 | பந்தமும்பிரிவு | 177 | மாலுலாமனந்த | 69 |
| துச்சானசெய்தி | 205 | பரிந்தசெஞ்சு | 75 | மாலோடயனு | 244 |
| துண்டவெண் | 102 | பவளமால் | 226 | மானேர்கலைவ | 66 |
| துணுக்கென | 38 | பவளமேமகு | 95 | மானைப்புரையு | 198 |
| துந்துபிகுழல் | 83 | பழையராந் | 94 | மின்னுருருவ | 195 |
| தூவிநீரோடு | 225 | பன்னெடுங் | 169 | முத்தர்முதுபக | 276 |
| தெள்ளுநீற | 104 | பனிபடுமதிய | 175 | முத்தீயாளர் | 197 |
| தேய்ந்துமெய் | 231 | பாடகமுநூபு | 192 | முத்துவயிரம | 185 |
| தேர்மலிவிழவிற் | 15 | பாடலங்கார | 57 | முழுவதுநீயாயி | 127 |
| தொடங்கினனண் | 77 | பாந்தள்பூணா | 153 | மூலமாய்முடிவ | 121 |
| தொழுதுபின்செ | 154 | பாம்பணைத்து | 145 | மெய்யரேமெய்ய | 98 |
| தொறுக்கள்வா | 224 | பாரோர்முழு | 200 | மைஞ்ஞின்ற | 125 |
| தோழியாஞ்செ | 105 | பாலுமமுதமு | 68 | மையன்மா | 215 |
| நிறைதழைவாழை | 16 | பிரவார்ந்த | 214 | மோதலைப்பட்ட | 139 |
| நின்றுநினைந்தி | 209 | பின்னுசெஞ்ச | 88 | யாதுநீநினைவ | 109 |
| நினைக்குநிரந்தர | 60 | புரியும்பொன் | 235 | வகைமிகுமசுரர் | 76 |
| நினைத்தேனினி | 252 | புவனநாயகனே | 112 | வண்டார்குழலு | 28 |
| நீரணங்கசும் | 100 | புழுங்குதீவினை | 113 | வரம்பிரிவாளை | 14 |
| நீரோங்கிவளர் | 122 | புனல்படவுருகி | 117 | வாடாவாய் | 212 |
| நீலமேகண்டம் | 96 | பூவணங்கோயில் | 151 | வாணுதற்கொடி | 280 |
| நீவாராதொ | 126 | பெரியவாகரு | 152 | வாரணிநறும | 257 |
| நீறணிபவளக் | 6 | பெருமையிற் | 4 | வாழியம்போத | 165 |
| நெஞ்சிடரகல | 85 | பொசியாதோ | 207 | வாளாமாலய | 213 |
| நெடியசமணு | 245 | பொய்யாதவேதி | 58 | வானநாடுடை | 234 |
| நெடியானேடு | 203 | பொருவரைப் | 18 | வானவர்கள் | 268 |
| நெற்றியிற்கண் | 163 | போழ்ந்தியானை | 218 | வானோர்பணிய | 246 |
| நேசமுடையவர் | 255 | மங்குல்சூழ் | 170 | விண்ணவர்மகுட | 44 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விம்மிவிம்மி | 282 | வெய்யசெஞ் | 173 | வேருகவுள்ளத்து | 34 |
| விரியுநீராலக் | 118 | வெறியேறு | 26 | வைத்தபாதங் | 230 |
| வெங்கோல்வே | 202 | வேந்தன்வளைத் | 63 | வையவாம்பெ | 180 |


## திருப்பல்லாண்டு


| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆரார்வந்தா | 300 | சேவிக்கவந் | 294 | பாலுக்குப்பாலக | 297 |
| எந்தையெந்தா | 301 | சொல்லாண்ட | 292 | புரந்தரன்மா | 293 |
| குழலொலி | 299 | தாதையைத்தா | 298 | மன்னுகதில்லை | 289 |
| சீருந்திருவும் | 295 | நிட்டையிலா | 291 | மீண்டுமனத்தவ | 290 |
| சேலுங்கயலு | 296 | | | | |

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்களாக
இருபதாம் பட்டத்தில் எழுந்தருளியிருக்கும்

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
## அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தமிழ்க்கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள், இசைத்தமிழ், அன்னதானம், வைத்தியம் இவற்றின் அபி விருத்திக்காகவும் பொது ஜனங்களின் அனுகூலத்துக் காகவும் மனமுவந்தமைத்திருக்கும் பேரறக் கட்டளைகள்.

| தொடர் எண் | தரும விவரம் | மூலதனம் ரூ |
|---|---|---|
| 1 | சிவஞானசித்தியார் உபன்னியாசக் கட்டளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ... | 15,000 |
| 2 | கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த ... | 11,500 |
| 3 | திருவாங்கூர் மகாராஜா தேவாரப் பரிசு ... | 5,000 |
| 4 | சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு ... | 5,000 |
| 5 | மூவர் தேவாரப்பரிசு : சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள் ... | 10,000 |
| 6 | ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தப் போதகாசிரியர் நியமிக்க ... | 60,000 |
| 7 | அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க ... | 30,000 |
| 8 | திருப்பனந்தாளில் தமிழ்க்கல்லூரி நிறுவ ... | 1,50,000 |
| 9 | இசைத்தமிழ்க் கல்விக்கு ... | 1,00,000 |
| 10 | திருப்பனந்தாளில் கால்நடை வைத்தியசாலை ஏற் படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் ... | 20,000 |
| 11 | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு நாள் அன்னதானம் ... | 10,000 |

| தொடர் எண் | தரும விவரம் | மூலதனம் ரூ |
|---|---|---|
| 12 | இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னதானம் ... | 10,000 |
| 13 | திருநள்ளாற்றில் ஆவணிமூல அன்னதானம் ... | 3,000 |
| 14 | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம் ... | 17,000 |
| 15 | திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உணவு நிதி ... | 1,00,000 |
| 16 | திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை நிறுவ நிலப் பெறுமானம் ... | 66,000 |
| 17 | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் கேதார கட்டம் ... | 2,900 |
| 18 | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் அரிச் சந்திர கட்டம் ... | 3,000 |
| 19 | கும்பகோணத்தில் மணிக்கூண்டு ... | 25,000 |
| 20 | தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை ... | 21,000 |
| 21 | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரர் நினைவு நாள் அன்னதானம் ... | 9,000 |
| 22 | மைசூர் மகாராஜா தேவாரப் பரிசு ... | 5,000 |
| 23 | தருமை ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, மாயூரம் ... | 5,000 |
| 24 | சென்னை விவேகாநந்தா கல்லூரியில் ராஜாஜி சைவ சித்தாந்தக் கட்டளை ... | 10,000 |
| 25 | ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சர். எஸ். ராதா கிருஷ்ணன் சைவ சித்தாந்தக் கட்டளை ... | 20,000 |
| 26 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, ஸ்ரீ வைகுண்டம் ... | 5,000 |
| 27 | மதுரைத் திருமலைநாயக்கர் தேவாரப் பரிசு ... | 10,000 |
| 28 | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவி கட்கு ... | 1,00,000 |
| 29 | ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் ... | 5,000 |

| தொடர் எண் | தரும விவரம் | மூலதனம் ரூ |
|---|---|---|
| 30 | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - ஸ்ரீ காசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு ... | 1,50,000 |
| 31 | டாக்டர் சுவாமிநாத ஐயர் நினைவுத் திருக்குறட் பரிசு, சென்னை ... | 3,500 |
| 32 | குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு ... | 1,000 |
| 33 | காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன் மாணவ உபகார நிதி ... | 3,000 |
| 34 | ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூசை ... | 10,000 |
| 35 | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் ... | 4,000 |
| 36 | விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி ... | 1,000 |
| 37 | குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு ... | 3,500 |
| 38 | திருநெல்வேலியில் ஸ்ரீ அரியநாயக முதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு ... | 3,500 |
| 39 | திருப்பனந்தாளில் அப்பூதி அடிகள் நினைவு தண்ணீர்ப் பந்தல் தருமம் ... | 3,500 |
| 40 | ஸ்ரீ வைகுண்டத்தில் படிப்பகநிதி ... | 3,500 |
| 41 | சிதம்பரம் உயர்தரப்பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி ... | 35,000 |
| 42 | சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம் ... | 12,000 |
| 43 | இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் ... | 3,500 |
| 44 | ஸ்ரீ வைகுண்டத்தில் நூல் நிலையக்கட்டிடம் ... | 12,825 |
| 45 | பஞ்சாப் அகதிகளுக்கு நன்கொடை ... | 5,000 |
| 46 | அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி ... | 3,500 |
| 47 | ஸ்ரீகாசி கேதாரீசுவரர் கோவிலில் ஸ்ரீ குமாரசாமி அன்னதானம் ... | 5,000 |
| 48 | ஸ்ரீ வில்லிபுத்தூரில் தேவாரப் பரிசு ... | 3,500 |
| 49 | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோவிலில் மின்சார தீபம் போட ... | 7,500 |

| தொடர் எண் | தரும விவரம் | மூலதனம் ரூ |
|---|---|---|
| 50 | காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு ... | 5,000 |
| 51 | திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம் ... | 7,000 |
| 52 | 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - ஸ்ரீ வைகுண்டம் முதல் ஆண்டு உதவி நிதி ... | 5,000 |
| 53 | 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்திற்கு முதல் இரண்டு ஆண்டு மூலதனம் ... | 14,000 |
| 54 | 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்- திருச்செந்தூர் முதல் ஆண்டு உதவி மூலதனம் ... | 5,000 |
| 55 | ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும் ... | 15,000 |
| 56 | மாளவியாஜீ பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக்கழகங்களில் சைவ சித்தாந்த உபன்னியாசக் கட்டளை ... | 5,000 |
| 57 | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் ... | 60,000 |
| 58 | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் சோமேசர் ஸ்நான கட்டம் நிறுவ ... | 1,500 |
| 59 | ஸ்ரீ வைகுண்டத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவ ... | 45,000 |
| 60 | ஸ்ரீ வைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி ... | 5,000 |
| 61 | பனசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு ... | 5,000 |
| 62 | (6) ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த நிதிக்கு அதிகப்படியாக அளித்தது ... | 16,000 |
| 63 | 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்— மதுரை முதலாண்டுதவி மூலதனம் ... | 7,000 |